# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 52வது கூட்டறிக்கை 2022.06.07

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 52வது அமர்வு 2022.06.07 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 01. | ஜனாப்.ஏ.எம்.எம்.நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. | ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. | ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. | ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. | ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 06. | திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 07. | திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. | ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 09. | ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. | ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. | ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. | ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 13. | ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. | திருமதி. கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. | திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. | திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. | திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 18. | திருமதி.கே.குலமணி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 19. | ஜனாப்.ஏ.எச்.அன்வர் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 01. | ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | | |
|---|---|---|
| 01. | ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. | திருமதி.ஏ.பீ.எப்.ஆக்கிலா | தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 52வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இந்த சபைக்கு ஒரு துணைவியாக வந்த நமது கௌரவ உறுப்பினர் வளர்மதி அவர்கள் இன்று மீண்டும் விடுமுறைக்குப் பின் ஒரு தாயாக சமூகமளித்திருக்கின்றாா். அவர் மேலும் மேலும் குழந்தைகளை பெற்று வாழ வேண்டும் என்று வாழ்த்தியவனாக,

கௌரவ உறுப்பினர் ஏ.சி.முஹம்மட் சஹீல் அவர்கள் சுகயீனம் காரணமாக சபை அமர்வுக்கு சமூகமளிக்க முடியாது என்று அறிவித்தல் விடுத்திருக்கின்றார். அவருக்கு விடுமுறை வழங்குவதற்கான அனுமதி.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |

சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

இவ் அமர்வின் அடுத்த விடயமாக சென்ற மாத கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். திருத்தங்கள் இருந்தால் கூறலாம். இல்லாவிட்டால் ஒருவர் ஆமோதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம்.இன்பவதி |

கூட்டறிக்கை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கௌரவ உறுப்பினர்களே மிகவும் சவாலான ஒரு காலகட்டத்தில் இந்த சபையும், சபையின் நிர்வாகத்தை செய்ய வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. நாளாந்தம் கூடிக் கொண்டுவரும் செலவீனங்களை எப்படி சமாளிப்பது என்பது இன்று நிர்வாகத்துக்கு ஒரு பாரிய சவால். நாங்கள் இப்படியான காலத்தில் நமது சேவைகளை வழங்குவதற்கு தடையாக இருக்கக்கூடாது என்று ஏறத்தாழ சுமார் 2000 லீட்டர் டீசல் ஏற்கனவே நாங்கள் வாங்கி வைத்திருந்தோம். இன்று நிலவும் சூழலில் அதை பாவிக்க வேண்டிய கட்டம் ஏற்பட்டிருக்கின்றது. 3,4 பரல் பாவிக்கப்பட்டுள்ளது. அரசாங்க அறிவிப்பின்படி 16 ஆம் திகதி வரை எரிபொருள் தட்டுப்பாடு இருக்குமானால் சில வேளைகளில் நமது திண்மக்கழிவு முகாமைத்துவ வேலைகளை நாம் சுருக்க வேண்டிய நிலைக்கு வரலாம். இவ்வளவு பிரச்சினைகள் இருந்தும் அகற்றும் குப்பைகள் குறைவதாகக் காணவில்லை. முறைப்பாடுகள் வருகின்றதே தவிர மக்களின் உணர்வுகள் இவ்வளவு கஷ்ட காலத்திலும் இந்த சபை இந்த வேலையை செய்து வருகின்றதே, அதில் நமது பங்களிப்பும் இருக்க வேண்டும் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் வந்ததாக நான் காணவில்லை. ஒவ்வொரு நாளும் வருகின்றபோது குப்பை வாகனங்கள் அதனை எடுத்துக் கொண்டு செல்லாவிட்டால் அதனை வீதியில் குமித்து விடுகின்றார்கள். அதை உணர்ந்து செயல்படுபவர்களை நான் காணவில்லை.

இவ்வாறான ஒரு சூழலில் இன்று சேவைக்கு வரும் உங்களுக்கு தெரியும், அரசாங்கம் நாம் அத்தியாவசிய சேவையாக இருந்தாலும் அந்தத் தேவைக்கு ஏற்ப ஊழியர்களை வேலைக்கு அழைக்குமாறு கூறி இருப்பதால், சில வெளியூர் உத்தியோகத்தர்களை நாம் வீட்டிலிருந்து வேலை செய்ய அனுமதித்துள்ளோம். அதேவேளையில் உள்ளூரிலும் சிலர் அந்த Roster ற்குள் வருகின்றார்கள். சிலவேளைகளில் அடுத்த வாரத்தில் இருந்து கிழமைக்கு நான்கு நாட்கள் வேலையாகவும் மாறலாம். இவை எல்லாம் நமது மக்கள் எம்மிடமிருந்து எதிர்ப்பார்க்கும் சேவையில் எதுவும் குறைபாடு இருக்கக் கூடாது என்ற நிலையில் இருக்கும் போது, இது ஒரு பாரிய சவாலாக மாறுகின்றது. அரசாங்கமும் நம்மை பொருத்தமட்டில் வழமைபோல் சம்பளம் மீளளிப்பைத் தவிர வேறு எந்த ஒரு கொடுப்பனவும் அல்லது பங்கீடும் செய்வதாக எந்த அறிவித்தலும் இல்லை. அப்படியானால் வருகின்ற மாதங்களில் சபை நடவடிக்கைகளை கொண்டு செல்வது பாரிய சவாலாக இருக்கும். உங்களின் ஒத்துழைப்போடு நான் பெருமையுடன் கூற வேண்டும் இந்த அம்பாறை மாவட்டத்திலுள்ள சபைகளில் ஏதாவது ஒரு வழியில் சேவைகள் செய்யக்கூடியதாக இருக்கும் ஓர் இரு சபைகளில் முதலிடம் சம்மாந்துறை பிரதேச சபை. இது சென்ற கிழமை அரச கணக்காய்வு உத்தியோகத்தர்கள் வந்த போது, அவர்கள் கூறினார்கள் அக்கரைப்பற்று மாநகர சபையில் அடுத்த மாதம் சம்பளம் கொடுப்பதற்கு பணம் இல்லாமல் கூட போகலாமென்று. அவர்களுடைய வைப்பிலிருந்த ஐந்து மில்லியன் ரூபாய் பணத்தை எடுத்து அவர்கள் வேறு ஒரு தேவைக்கு பாவித்து விட்டார்கள். இதனால் சம்பளம் வழங்குவதற்கு முடியாத நிலை ஒன்று ஏற்படலாம் என அவர்கள் கூறினார்கள். அந்த நிலை இந்த சபைக்கு வராது. அதற்கு பெருமை கூற வேண்டியவர்கள் நீங்கள் எல்லோரும் தான். நீங்கள் என்னுடன் எவ்வளவு முரண்பட்டாலும் அந்த விடயத்தில் நாம் இந்த சபையை விட்டுச் செல்லும்போது இந்த சபை எந்த ஒரு கையிருப்பும் இல்லாத நிலை இருக்கக்கூடாது என்ற நமது நிலைப்பாட்டில் மாற்றமில்லை.

அடுத்த விடயமாக சென்ற மாதத்தில் செலவினங்களை அங்கீகரித்தல். அதில் ஏதாவது கேள்விகள் இருப்பின் தெளிவூட்டல். இல்லாவிடில் அதைனை அங்கீகரித்தல்.

**தீர்மானம் - 04/52/01**

சென்ற மாதம் 2022.05.01 தொடக்கம் 2022.05.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

Deposit யில் செலுத்த வேண்டிய கையிருப்பு 14.5 மில்லியன். கையிருப்பில் உள்ள பணம் 27.4 மில்லியன். மே மாதத்தில் சபையின் வருமானம் 3.1 மில்லியன், சபை நிதியின் மூலமான செலவு 3.4 மில்லியன். வரவுக்கு மேலான செலவு. இதை நான் உங்களிடம் தந்தாலும் நீங்கள் ஒருகாலமும் இதனைக் கேட்பதில்லை. ஆனால் நீங்கள் கேட்க வேண்டும். ஏனென்று சொன்னால் சபை கலைந்தாலும் நமது பெயருக்கு கலங்கம் வரக்கூடாது. அதுதான் என்னுடைய பிடிவாதம் நான் உங்கள் அனைவருடன் முரண்படக் காரணம் என்னவென்றால் சபை கலையலாம். நாம் அங்கத்தவர்களாக இல்லாமல் போகலாம். நாம் வீதியில் செல்லும்போது இவர்கள் எல்லாவற்றையும் சாப்பிட்டு விட்டுச் சென்று விட்டார்களென்று சொல்லக்கூடாது. நாம் சபையை விட்டுச் செல்லும் போது எமது சபையிலுள்ள பணம் எவ்வளவு என்பது பகிரங்கமாகச் சொல்லி விட்டுத்தான் செல்ல வேண்டும். அந்தப் பெருமை உங்கள் அனைவரையும் சாரும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

LDSP செயற்திட்டத்திற்காக, முதல் அனைத்து வங்கிக் கணக்குகளும் ஒரே வங்கிக் கணக்கில் இருந்தது. தற்போது அதற்கென்று தனியான ஒரு வங்கிக் கணக்கை திறக்குமாறு அவர்கள் கூறியுள்ளார்கள். அதற்கான புதிய ஒரு வங்கி கணக் கொன்றை தொடங்குவதற்கான அனுமதி.

**தீர்மானம் - 04/52/02**

LDSP செயற்திட்டத்திற்காக தனியான வங்கிக் கணக்கினைத் திறப்பதற்கும், இக்கணக்கில் முதலாவது ஒப்பமிடுவதற்காக செயலாளரும், இரண்டாவது ஒப்பமிடுவதற்காக நிதி உதவியாளரையும் நியமிப்பதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்வர் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

சபையின் வாகனங்களை வாடகைக்கு விடுவதற்காக தற்போது உயர்த்தப்பட்ட எரிபொருள் விலையினையும் மற்றும் பராமரிப்பு செலவினையும் கருத்தில் கொண்டு கட்டணங்களைத் தீர்மானித்தல் வேண்டும்.

உதாரணமாக மோட்டார் கிரேடர் ஒரு மணித்தியாலத்துக்கு 4600.00 ரூபாய் எடுக்கின்றோம். ஒப்புதலுக்கு இன்னொரு பிரதேச சபையை (வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபை) எடுத்துப்பார்த்தால் மோட்டர் கிரேடர் ஒரு மணித்தியாலத்துக்கு 6,100.00 ரூபாய் அந்த சபையினால் அறவிடப்படுகின்றது. எமது உத்தியோகத்தர்களின் சிபாரிசு 4,500.00 ரூபாயை 5,500.00 ரூபாயாக கூட்டுமாறு சிபாரிசு செய்கிறார்கள்.

பேக்கோ லோடர் தற்போது 4,000.00 ரூாய் அவர்களின் முன்மொழிவு 7,000.00 ரூபா. JCB மற்ற சபை எடுப்பது 4,320.00 ரூபாய் சேவையை கருத்தில் கொண்டு அவர்கள் செயற்படுகின்றார்கள். நாம் நட்ட படக்கூடாது வியாபார நோக்கமாகவும் கொள்ளக் கூடாது. வியாபாரிகளும் இதைனை பாவிப்பார்கள், ஏழைகளும் இதில் பாதிக்கப்படாத வகையில் இருக்கு வேண்டும்.

ஒரு தொன் ரோலர் தற்போது நான்கு மணித்தியாலங்களுக்கு 16,000.00 ரூபாய் மேலதிக ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் 4,000.00 ரூபா. அதில் மூன்று மணித்தியாலத்திற்கு 5,000.00 ரூபா ஒவ்வொரு மேலதிக மணித்தயாலயத்திற்கும் 1,500.00 ரூபா, முதல் மூன்று மணித்தியாலங்களுக்கும் 6000.00 மேலதிக ஒவ்வொரு மணித்தியாலயத்திற்கும் 2,000.00 ரூபாவும் அறவிடலாம். மூன்று தொன் ரோலர் முதல் மூன்று மணித்தியாலயத்திற்கும் 9,000.00 ரூபா வும் மேலதிக ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் 2,500.00 ரூபா. Tractor with trailer எட்டு மணித்தியாலங்களுக்கு 9,000.00 ரூபா, Tractor with water bowser ஒரு தடவைக்கு 3000.00. 6000 L ற்கு 6000.00 ரூபா, 8000 L 7000.00 ரூபா, இதில் நாம் பார்க்க வேண்டியது என்னவென்றால் நாம் ஒரு சேவையை செய்யும் நிறுவனம். இலாபம் இல்லை ஆனால் நாம் நஸ்டப்படக்கூடாது. அடுத்ததாக வசதி இல்லாத குடும்பங்களுக்கு எந்த வகையிலும் நாம் ஒரு சலுகையை செய்யலாம் என்று முடிவு நமக்குள் இருக்க வேண்டும். உண்மையாக வறுமையில் இருக்கும் ஒரு குடும்பத்திற்கு இயந்திரம் தேவைப்பட்டால் அதற்கு ஒரு விதிவிலக்கு ஒன்றை நாம் உருவாக்க வேண்டும். இல்லை என்றால் நாம் ஒரு சபை என்பதில் அர்த்தமில்லை. ஒரு தனிநபர் அதனை பார்க்கமாட்டார். பிரதேச சபை நிச்சயமாக ஒரு எழிய குடும்பத்துக்கு ஒரு குழி தோண்டிக் கொடுக்க வேண்டுமாக இருந்தால் அதற்கு நாம் ஒரு மணித்தியாலய வேலை என்றால் 7000.00 ரூபா செலவாகும். அதற்கு அவர்கள் சமூர்த்தி பெறுபவர்களாக இருந்தால் மஹல்லாவின் சிபாரிசும், GS இன் சிபாரிசும் இருத்தல் வேண்டும். அவ்வாறு கொண்டு வரும் பட்சத்தில் தான் அவருக்கு சலுகை வழங்கப்படும். இவைகளை நான் சொன்னது என்னவென்றால், நாம் இதை செய்துவிட்டு பிறகு நிர்வாகிகளுக்கு அதில் பிரச்சினைகள் வரக் கூடாது. ஒரு எளிய குடும்பம் வரும்போது அதற்கு நீங்களும் சிபார்சு செய்து அதற்கு அனுமதி வழங்கினால் அதனை ஒரு சலுகை அடிப்படையில் செய்து கொடுக்கலாம். அது எமது செலவை பாதிக்கக் கூடியதாக இருத்தல் கூடாது. இலாபமில்லாமல் செலவு மட்டும் கருத்தில் கொள்வதாக இருத்தல் வேண்டும்.

எமது தொகையில் அந்த சிபாரிசுடன் வருபவர்களுக்கு 55% அல்லது 50 % கழிவாக வழங்குவோம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே Tractor, water bowser களுக்கு சேவையை அடிப்படையாகக் கொண்டு இருப்பதனால் 20 வீத அதிகரிப்பை செய்ய வேண்டும். தனியார் போக்குவரத்து சங்கத்திற்கும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருக்கின்ற கட்டண அதிகரிப்பு வீதம் 19.5 வீதம் கிட்டத்தட்ட 20 வீதம். நாங்கள் 5000.00 ரூபா அறவிட்டால் 20 வீதம் கூட்டி 6000.00 ரூபா அதிகரிக்கலாம்.

கௌரவ தவிசாளர் அவர்களே வர்த்தக அடிப்படையாக இல்லாமல் சேவையை அடிப்படையாகக் கொண்டவைகளுக்கு 20 வீதம் அதிகரிப்பை நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்**

உங்களுக்கு தெரியும் நாம் இரண்டு Conference Hall களை உருவாக்கியுள்ளோம். எமது சபையின் மேல் மாடியில் காபட் இடப்பட்டு A/C பொருத்தப்பட்ட 100 பேர் அமர்ந்து கூட்டம் நடாத்தக்கூடிய கூட்ட மண்டபம் உள்ளது. அதேபோல் அமீர் அலி நூலகத்தில் 30 பேரைக் கொண்டு கூட்டம் நடாத்தக் கூடிய ஒரு Hall ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. அதனை நாம் வாடகைக்கு விடுவதற்கு யோசிக்கலாம். குழுக் கூட்டங்கள், சங்கக் கூட்டங்கள், கருத்தரங்குகள் நடாத்தக் கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான வாடகையை நாம் தீர்மானிக்க வேண்டும். முதலில் எமது சபையின் மேல் மாடியில் உள்ள மண்டபத்திற்கான தொகையை தீர்மானிப்போம். அந்த மண்டபத்தினுள் சாப்பாட்டுப் பொருட்களை கொண்டு செல்வதற்கு அனுமதிப்பதில்லை.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**

எமது ஜனாதிபதி விளையாட்டு கட்டடத் தொகுதியையும் இதனை போன்று வடிவமைத்து அதில் இருந்து வருமானம் பெறுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்**
அதனை சபை நிதியில் இருந்து மேற்கொள்வதாக இருந்தால் செய்யலாம். ஜனாதிபதி விளையாட்டு கட்டடத் தொகுதியை நவீன முறையில் வடிவமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**

முதல் ஒரு மணித்தியாலத்திற்கு 5,000 ரூபாயும் அடுத்த மேலதிக ஒவ்வொரு மணித்தியாலத்திற்கு 2,000.00 ரூபாவும், வைப்புப்பணம் ஒன்றையும் அறவிடுவோம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்**

சாப்பாடு கூட்ட மண்டபத்தினுள் கொண்டு செல்ல அனுமதிக்க முடியாது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே வருமானத்தை கூட்டுவது நோக்கமாக இருந்தால் ஊரில் நடைபெறுகின்ற சிறிய சிறிய சங்கத்துக் கூட்டங்கள் எல்லாம் இங்கு அழைக்கலாம். முதல் மணித்தியாலத்திற்கு 5000.00 ரூபாவும் மேலதிகமாக பயன்படுத்துகின்ற ஒவ்வொரு மணித்தியாலயத்திற்கும் 2000.00 ரூபாவும் அறவிடலாம். சாப்பாட்டை நாம் கட்டுப்படுத்த முடியாது. வைப்பாக 5000.00 ரூபாய் எடுப்போம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்**

வழமையாக காபட் இடப்பட்ட AC பொருத்தப்பட்ட மண்டபங்களில் உணவுப் பண்டங்கள், நீரை கொண்டு செல்ல முடியாது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலூவ்பா**

முழு நாள் கூட்டங்கள் நடை பெறுவதற்காக இந்த கூட்டமண்டபத்தை எடுத்தால் அங்கு வருபவர்களுக்கு காலை உணவு மதிய உணவு போன்றவை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். அவர்களிடம் அந்தப் பணம் அறவிடுகின்ற படியினால் சாப்பிடுவதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்**

அவ்வாறான கூட்டங்களுக்கு இதை பயன்படுத்த முடியாது. அவ்வாறான கூட்டங்கள் நடத்துவதாக இருந்தால் அதனை ஜனாதிபதி விளையாட்டுக் கட்டடத் தொகுதியில் தான் நடாத்த வேண்டும்.

**தீர்மானம் - 04/52/03**

சம்மாந்துறை பிரதேச சபைக்கு 2022ஆம் வருடத்திற்கான இயந்திரோபகரணங்கள், மண்டபங்களை வாடகைக்கு விடுதல் கட்டணத்தை நிர்ணயித்தலுக்கான பிரேரணை

சம்மாந்துறை பிரதேச சபைக்குச் சொந்தமான வாகனங்கள், இயந்திரோபகரணங்கள் மற்றும் மண்டபங்களை வாடகைக்கு வழங்குவது தொடர்பாக கீழே அட்டவணை I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்ட பல்வேறு வாகனங்கள், இயந்திரோபகரணங்களுக்காக மற்றும் மண்டபங்களுக்கான II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்ட கட்டணத்தை 2022 ஆம் வருடத்திற்காக 10.06.2022 ஆந் திகதியிலிருந்து மீள் நிர்ணயம் செய்து அறவீடு செய்திட சம்மாந்துறை பிரதேச சபை தீர்மானித்தது.

**அட்டவணை – 01**

| நிரல் I<br>விபரம் | நிரல் II<br>கட்டணம் (ரூபா) |
|---|---|
| 1. மோட்டார் கிரேடர் | ஒரு மணித்தியாலயத்திற்கு 6,000.00 |
| 2. JCB – Backhoe Loader | ஒரு மணித்தியாலயத்திற்கு 7,000.00 |
| 3. Roller வாடகை | |
| I. 01 Ton Roller | முதல் 03 மணித்தியாலயத்திற்கு 6,000.00, மேலதிக மணித்தியாலம் ஒன்றிக்கும் 2,000.00 |
| II. 03 Ton Roller | முதல் 03 மணித்தியாலயத்திற்கு 9,000.00, மேலதிக மணித்தியாலம் ஒன்றிக்கும் 2,500.00 |
| 4. Tractor with Trailer (08 மணித்தியாலம்) | நாளொன்றுக்கு 9,000.00 |
| 5. Tractor with water bowser | 01 Trip 3,000.00 |
| 6. Tractor with water bowser (Out Side) | 01 Trip 3,500.00 |
| 7. Tractor with water bowser -Additional Trip | 01 Trip 2,500.00 |
| 8. Tractor with water bowser –Road work Spray | 01 Trip 3,500.00 |
| 9. Tractor with water bowser –Road work Spray Out Side | 01 Trip 4,000.00 |
| 10. Tractor with water bowser –Road work Spray Additional Trip | 01 Trip 3000.00 |
| 11. Water Bowser 6000 Litter | 01 Trip 6000.00 |
| 12. Water Bowser 8000 Litter | 01 Trip 7000.00 |
| 13. ஜனாஸா வாகனம் | 01 KM இற்கு 25.00 (பிரதேச சபை எல்லைக்கு அப்பால்) |

**சபைக்குச் சொந்தமான கூட்ட மண்டபங்களை வாடகைக்கு விடுதல்**

01. பிரதான அலுவலக கூட்ட மண்டபம் (குளிரூட்டப்பட்டது, Digital திரை) சுமார் 100 ஆசணங்கள் — 01 மணித்தியாலயத்திற்கு 5,000.00 மேலதிக மணித்தியாலம் ஒன்றிக்கு 3,000.00. பாதுகாப்பு வைப்பாக 3,000.00

02. அமீர் அலி பொது நூலக கூட்ட மண்டபம் (குளிரூட்டப்பட்டது, Digital திரை) 30 ஆசணங்கள் — 01 மணித்தியாலயத்திற்கு 3,000.00 மேலதிக மணித்தியாலம் ஒன்றிக்கு 2,500.00. பாதுகாப்பு வைப்பாக 1,000.00

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர்

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/52/04

வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பத்தவர்களுக்கு பிரதேச சபைக்குச் சொந்தமான வாகனங்கள், இயந்திரோபகரணங்களை வாடகைக்கு வழங்கும் போது அவர்கள் சமுர்த்தி பெறுபவர்களாக இருந்தால் மஹல்லா மற்றும் வணக்கஸ்தலத்தின் சிபாரிசும், GS இன் சிபாரிசும் இருத்தல் வேண்டும். அவ்வாறு கொண்டு வரும் பட்சத்தில் அவர்களுக்கு முழுத் தொகையில் 50% கழிவாக வழங்கவதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர்

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## கௌரவ தவிசாளர் அவர்கள்

இதில் உங்களது கருத்துக்களை வழங்குமாறு கூறுகின்றேன். ''சுபிரி காடன்'' வீட்டுத் தோட்டம் மற்றும் மாதிரி குழுப் பண்ணை திட்டத்திற்கமைய பயிர்ச் செய்கை திட்டம் - 2022. இதன் பின்னணியை நான் உங்களுக்கு கூற வேண்டும். நாம் இதில் பாடங்கள் கற்று இருக்கின்றோம் அரசாங்கம் எல்லா திணைக்களங்களுக்கும், எல்லா மக்களுக்கும் அவர்கள் அவர்களின் தேவைகளுக்கு ஏற்ற வகையில் பயிர்களை உற்பத்தி செய்யுமாறு வேண்டுகோள் ஒன்று விடுத்துள்ளது. இதை ஒவ்வொரு திணைக்களமும் அவர்கள் அவர்களுடைய திணைக்களங்கள் மூலமாக செயல்படுத்துவதற்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்கள்.

சம்மாந்துறையைப் பொறுத்தவரையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தின் அடிப்படையில் நான் எடுத்த நிலைபாடு என்னவென்றால் இந்த பயிர்ச் செய்கைகளை கட்டாயப்படுத்தி செய்ய முடியாது. ஊக்குவிப்பதன் மூலம் தான் இதனை செய்ய முடியும். அதனால் சகல அமைப்புகளும் பிரதேச சபை, பிரதேச செயலகம், வைத்தியசாலை, பொலிஸ் நிலையம், பள்ளிவாசல், பாடசாலைகள் எல்லோரும் இணைந்து ஒரு கூட்டு முயற்சியாக, ஒருவர் செய்யும் போது இன்னொருவர் தடையாக வரக்கூடாது. அவர்களும் பங்காளிகளாக மாறி செயல்படுவதற்கும், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பொறுப்பை வழங்கி, கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கு அரச நிறுவனங்களில் நடக்கும் விடயங்களை மேற்பார்வை செய்தல், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் வீட்டுத் தோட்டங்களை கண்காணித்தல், EDO மார்கள் பாவனையில் இல்லாத வெற்று நிலங்களை அடையாளம் காணல்.

நீங்கள் ஆச்சரியம் அடைவீர்கள் சென்ற வாரம் நானும் இரண்டு AI மார்களும் சம்மாந்துறையை ஒரு சுற்றிவளைத்து வந்தோம், செந்நெல் கிராமம் பகுதியில் சுற்றி வந்தபோது அந்தப் பகுதியில் கட்டுமான வேலைகளை பார்த்தால் எமக்கு ஆச்சரியமாக உள்ளது. அதிகமான வளவுகள் சுற்று மதில்கள் கட்டப்பட்டு யாருமில்லாத நிலையில் பூட்டப்பட்டு காணப்படுகின்றது. அந்த வளவுகளில் பயிர்

செய்தால் முழு அம்பாரை பிரதேசத்திற்கும் நாம் வழங்க முடியும். இந்த முயற்சியில் ஒரு பொது அறிவித்தல் விடப்படும் இந்த காணிகளில் புரணாக உள்ள காணிகளில் ஏதாவது ஒரு பயிர் செய்யாவிட்டால் செய்பவர்களுக்கு தற்காலிகமாக எடுத்து வழங்குவதற்கு. இதில் சபையில் நாம் கற்றுக்கொண்ட பாடம் என்னவென்றால் அரசு ஊழியர்களை வைத்து இவைகளை செய்து வெற்றி காண முடியாது. அரசாங்கமும் இதற்குரிய செலவீனங்களை எவ்வாறு செய்வது என்று யோசித்துக் கொண்டிருக்கும்போது, நான் ஒரு கருத்தை முன் வைத்தேன். ஜனாதிபதி விளையாட்டு கட்டிடத்திற்குள்ளும், எலும்பரைக்கும் ஆலைக்குள்ளும் நாங்கள் நாற்று மேடைகளை உருவாக்குவோம். கன்றுகளை உருவக்கி அவற்றை பக்கட் செய்து, விற்பனை செய்கின்றோம். உதாரணமாக ஒரு கிலோ கிராம் ஹைபிரிட் மிளகாய் விதைகள் ஒரு லட்சம் ரூபாய். இதில் கிட்டத்தட்ட 80 ஆயிரம் கன்றுகள் உருவாக்க முடியும். அதை நாம் உருவாக்கி ஒரு பாக்கட்டில் 5 கன்றுகளை வைத்து பதினைந்து ரூபாய்க்கு விற்க முடியும். இதில் சபைக்கும் நஸ்டம் ஏற்படாமல் அதனை பராமரிக்கும் பொறுப்பை நாமும் எடுக்காமல் அந்த வேலையை நாம் செய்து கொடுப்போம். எமது பங்களிப்பாக சென்னெல் கிராமம் நூலக வளவில் மரவள்ளிக் கிழக்கு பயிரிடுவோம். கௌரவ உறுப்பினர்களே உங்களுடைய வீட்டில் உங்களுக்கு தேவையான பயிர்களை செய்யுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

### கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:

கௌரவ தவிசாளர் அவர்களே, விவசாய விடயம் அனைவருக்கும் தெரிந்த ஒன்று. நீங்கள் சென்று பார்வையிட்டதில் சென்னெல் கிராமத்தில் உள்ள வளவுகள் விவசாய நோக்கமல்ல. அனைத்தும் வர்த்தக நோக்கங்களுக்காக உள்ளது. சில இடங்களில் தண்ணீர் இல்லாமல் உள்ளது. அவ்வாறு இருந்தும் பயிர் செய்தால் குரங்குகளின் தொல்லை காணப்படுகின்றது. நாம் ஒரு லட்சம் ரூபா கொடுத்து இவைகளை வாங்குவதைவிட விவசாய அமைச்சிடம் நேரடியாக சபையூடாக தொடர்பு கொண்டு இந்த நிலங்களை அடையாளம் காட்டி இந்த நாற்று மேடைக்குத் தேவையான பொருட்களை நாம் இலவசமாக அவர்களிடம் பெற்றுக் கொள்ள முயற்சி எடுக்க வேண்டும். AI மார் எம்முடன் இணைந்துள்ள படியினால், எமது சென்னெல் கிராம நூலக வளவு, சந்தை வளவு பெரிய வளவுகள் ஆனால் அங்கு நீரில்லை. சென்ற முறை செய்த அனுபவத்தை வைத்துத்தான் கூறுகின்றேன். தொழிலாளர்களுக்கு மேலதிக சம்பளம் கொடுக்க முடியாத நிலை ஏற்படுகின்ற போது அவர்களில் சிலரை தெரிவு செய்து அவர்களுக்கு அந்த பயிர்ச் செய்கைகளை பொறுப்பாக்கிக் கொடுக்கின்ற போது அதை சிறப்பாக செய்யமுடியும்.

இப்போது உள்ள விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர அவர்களுடன் எமது கட்சி சார்பாக உங்களுடைய அனுமதியுடன் நாங்களும் அவர்களுடன் பேசி அதனை கேட்க முடியுமென்று கூறி விடைபெறுகின்றேன்.

### கௌரவ தவிசாளர் அவர்கள்

இன்று திணைக்களங்கள் எதுவும் தரக்கூடிய நிலையில் இல்லை. நான் எல்லோரிடமும் உரையாடிய பின்புதான் சபைக்கு இதனை கொண்டு வந்தேன். திணைக்களங்கள் இதற்கு சிபாரிசு செய்கின்றதே தவிர அவர்கள் வேறு எதுவும் செய்ய முடியாது. நான் திணைக்களங்களிடம் விதைகள் கேட்டிருந்தேன். அவர்கள் கூறியிருந்தார்கள் எங்களுக்கு இவ்வாறான திட்டம் ஒன்றில்லை என கூறுகின்றார்கள். அதற்கு செலவு செய்வதற்கு பணம் இல்லை. அதற்காகத்தான் மக்களை இதனை செய்யுமாறு கூறி உள்ளார்கள். இலவசமாக வழங்கும் திட்டமில்லை. எமது பங்களிப்பாக இதனை நாம் செய்வோம்.

### தீர்மானம் - 04/52/05

‘‘சுபிரி காடன்’’ வீட்டுத் தோட்டம் மற்றும் மாதிரி குழுப் பண்ணை திட்டத்திற்கமைய பயிர்ச் செய்கை திட்டம் - 2022 செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நாற்றுமேடை அமைப்பதற்கான நிலம் பண்படுத்தல், வேலியடைப்பு, அதற்குத் தேவையான தரமான விதைகள், கன்றுகளை பக்கட்

செய்வதற்குத் தேவையான பொருட்கள், உரம் மற்றும் பூச்சி நாசினிகள் கொள்வனவு செய்வதற்கான செலவுகளை வழங்கி உற்பத்தியை மாணிய அடிப்படையில் வினியோகித்து அதன் மூலம் செலவுகளை மீளப் பெற முயற்சி செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/52/06**

PD - 1845 Cab வாகனத்தின் சீட் கவர்களை குசன் செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்**

எமது Digital Advertising Board சம்பந்தமான வழக்குக்கு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் ஒரு லட்சம் ரூபாய் செலுத்துவதற்கு அவர்கள் சம்மதம் தெரிவித்துள்ளார்கள். அதற்கான முதற்கட்டப் பணம் செலுத்தப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவின் படி சரியான முறையில் வந்து அவர்கள் அதனை களற்றி எடுத்துச் செல்வதற்கு அனுமதி நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

**தீர்மானம் - 04/52/07**

வாகன தரிப்பிடத்தில் வாகனங்களை சேவிஸ் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அதன் நடவடிக்கைகளை நாம் கண்காணிப்பதற்கும், எலும்பு அரைக்கும் ஆலைய வளவுக்குள் வாகனங்களை நிறுத்தப்படுவதனால் இவ்விரு இடங்களுக்கும் CCTV கமராக்களை பொருத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்**

ஹிஜ்றா பொதுச்சந்தையின் மேல் மாடிப் பகுதியில் உள்ள கடைகள் அலுவலகங்களுக்காக வாடகைக்கு எடுக்கப்படுகின்றன. அங்கு ஒழுங்கான மலசலகூடம் இல்லை. தற்போதுள்ள மலசல கூடத்தினால் தொடர்ச்சியான பிரச்சினை காணப்படுகின்றது. அங்கிருக்கின்ற மலசல கூடத்தை மூடிவிட்டு மல்காம்பிட்டிப் பாக்கமாகவுள்ள ஒரு அறையை மலசல கூடமாக மாற்றுவோம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே அதனை ஒரு பொது மலசலகூடமாக பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் செய்தால் என்ன?

**கௌரவ தவிசாளர் அவர்கள்**

மேலே நாம் செய்தால், அதில் நமக்குள்ள பிரச்சினை என்னவென்றால். அங்குள்ள பிட். கீழே மலை உள்ளதால் அந்த ஒரு மலசல கூடத்தில் வைத்து சமாளிப்பதில் உள்ள பிரச்சினை என்னவென்றால் அந்த பிட் நிரம்பியவுடன் அதனை இழுக்க வேண்டும். அதனை கீழே தோண்டுவதற்கான வசதி இல்லை. இப்போது நாம் கபூர் ஹோட்டலுக்கு முன் பக்கத்தில் ஒரு குழி தோண்டி செய்துள்ளோம். அவ்வாறு செய்தும் அவ்விடத்தில் உள்ள சவால் பொது மலசல கூடம் என்றவுடன் அங்கு ஒரு டேங் ஒன்றை உருவாக்கிக் கொள்ள முடியாமல் உள்ளது. அதை நாம் ஆய்வு செய்வோம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
எமது ஊரில் உள்ள பெரிய ஒரு குறைபாட்டை நீக்குவது போன்றும் இருக்கும். வெளியூரில் இருந்து வருகின்ற வியாபாரிகள், பிரயாணிகளும் மிகவும் அசௌகரியத்தை எதிர் நோக்குகின்றார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்**

நாம் இவ்வாறான ஒரு முன்மொழிவை வைப்போம். அந்த MPCS வளவில் DS குவாட்டசுக்குப் பக்கமாக ஓரமாக ஒரு பொது மலசல கூடத்தை உருவாக்குவதற்கு MPCS யிடம் அனுமதி ஒன்று கேட்போம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**

இந்த இடம் பிரயாணம் செய்பவர்களுக்கு வசதியாக இருக்காது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்**

நான் ஹிஜ்ரா பள்ளிவாசல் நிர்வாகத்திடம் அந்த மலசல கூடத்தில் ஒரு பகுதியை எமக்கு தருமாறு அதை நாங்கள் அதனை புளக் செய்து சந்தையுடன் இணைப்பதற்குக் கோரியிருந்தேன். ஆனால் அவர்கள் அதற்கு சம்மதிக்கவில்லை.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**

இதனை நாம் மீண்டும் ஒரு கோரிக்கையாக ஊரின் முக்கிய சபைகளிடம் வேண்டுகோள் விடுத்தால் என்ன? அது ஒரு முக்கியான தேவையாகவுள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்**

நிச்சயமாக அதைச் செய்வோம். நானும் அதனை உணர்ந்துள்ளேன். ஒரு பொது மலசலகூடம் சம்மாந்துறைக்குள் ஒருவர் வந்தால் பள்ளிவாசலுக்குள் தான் செல்கின்றார்கள். நாம் சபையினால் அவர்களிடம் வேண்டுகோள் ஒன்று விடுப்போம்.

**தீர்மானம் - 04/52/08**

ஹிஜ்றா பள்ளிவாசல் வளவில் ஒரு பகுதியை ஹிஜ்றா பொதுச் சந்தையுடன் இணைத்து பொது மலசல கூடமாக்குவதற்காக சம்மாந்துறைப் பிரதேச சபைக்கு வழங்குமாறு கோரி ஊரின் முக்கிய சபைகளிடம் வேண்டு கோள் விடுப்பதற்கான பிரேரணை

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம.மாஹிர்

ஆமோதித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌஸாட்

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

### தீர்மானம் - 04/52/09

ஹிஜ்றா பொதுச் சந்தைக் கட்டடத்தின் மேல்பகுதியில் மல்காம்பிட்டிப் பக்கமாக உள்ள கடையறை இல.13 யில் மலசல கூடம் அமைப்பதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌஸாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ்

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

### தீர்மானம் - 04/52/10

ஜனாதிபதி விளையாட்டு கட்டடத் தொகுதியின் கேட்போர் கூடம், ஏனைய அறைகளை நவீன முறையில் வடிவமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

### கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:

கௌரவ தவிசாளர் அவர்களே பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு கருத்தரங்கு ஒன்றை இலவசமாக மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்கள். இதற்காக அந்த மாணவர்கள் அப்துல் மஜீட் மண்டபத்தை கோரியிருந்தார்கள். அந்த மாணவர்கள் படிப்பவர்கள் என்பதால், அவர்களிடம் வசதி இல்லை. இலவசமாக மண்டபத்தை வழங்குமாறு கோரியிருந்தார்கள். நடைமுறையில் மின் கட்டணம் ஏதாவது எடுக்க வேண்டும் என்று செயலாளர் அவர்கள் கூறினார்கள். கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் அதற்கான பணத்தை கொடுத்து உதவி செய்தார்கள். இவ்வாறான படித்த மாணவர்கள், பல்கலைக்கழகத்தில் உள்ள பிள்ளைகள், கல்வி சார்ந்த கருத்தரங்குகள் நடாத்த வருகின்ற போது நாம் கல்விக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும்.

### கௌரவ தவிசாளர் அவர்கள்

இதில் பிரச்சினை என்னவென்றால் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் என்ன பார்க்கின்றார்கள் என்றால் இது ஒரு வருமானத்தை தரக்கூடிய ஒன்று. விதிவிலக்கு என்பது தெளிவான ஒரு சட்டம் இல்லாவிட்டால் அது அதிகார துஷ்பிரயோகம் என்று கூறுவார்கள். தவிசாளர் நினைத்தால் அதனை வழங்கலாம் என்று இல்லாமல் கல்வி என்று கூறுகின்ற போது உங்களுடைய கருத்தில் உடன்படுகிறேன். இதில் உத்தியோகத்தர்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். Audit விடயங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். பொலீஸ் நிலையம், பிரதேச செயலகம் பொது விடயம சம்பந்தமாக கேட்கின்ற போது சில விடயங்களுக்கு நாங்கள் இலவசமாக வழங்குகின்றோம்.

கணக்காய்வு உத்தியோகத்தர்கள் இதனை அடிக்கடி கூறுகின்றார்கள் இதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டியது இந்த விடயத்தில் தான். எல்லா அதிகாரமும் தவிசாளருக்கு இருந்தாலும் அதனை கட்டுப்படுத்துவதற்காகத்தான். அந்த காரணம் சரியாக இல்லாவிட்டால், சில முறைப்பாடுகள் வந்தது என்னவென்றால் சென்றமுறை நிர்வாகம், சபை கலைந்ததற்கு பிறகு அதிகமான பிரச்சிகைள்

நடாந்துள்ளது. அதன் பிறகுதான் ஒரு புத்தகம் போடப்பட்டு பதிவுகள் மண்டபத்தில் மேற்கொள்ளப்படுகின்றது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே அதனை சரியான முறையில் தீர்மானிக்க வேண்டும். அதிகமான பிரச்சினைகள் வரும் என்பதால் தான் இதை நானே செய்து வழங்கினேன். சில விடயங்களுக்கு நாமே முன்மாதிரியாக எடுத்துக் காட்டாக இருந்து காட்ட வேண்டும்.

இரண்டு மணித்தியாலங்களுக்கு எடுத்து விட்டு ஐந்து மணித்தியாலங்கள் அரசியல் பேசிய சந்தர்பங்களும் உண்டு. அதனால் தான் எனது சொந்தப் பணத்தில் அதனை எடுத்துக் கொடுத்தேன். அவர்கள் நினைக்கிறார்கள் இவ்வாறெல்லாம் ஊழல் நடந்திருக்கிறது என்று. அவர்கள் கேட்கின்ற நேரம் எமக்கு சரியான பதில் கூற முடியாதுள்ளது. அதே நிலையை நாம் செய்து விடக்கூடாது என்பதற்காகத்தான் நான் எனது சொந்தப் பணத்தில் இதனை செய்து கொடுத்தேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்**

இதை நாம் உணர வேண்டும். நாம் ஒன்றை வைத்து விட்டு சென்றால் அதற்கு பிறகு நிர்வாகிகளுக்கு அரசியல் அழுத்தங்கள் வரும். எமது சபை அதனை பாரம் எடுத்ததற்குப் பிறகு பதிவுப் புத்தகம் ஒன்று போடப்பட்டள்ளது. ஒவ்வொரு நாளும் மண்டபம் திறந்து மூடப்படும் வரை என்ன நடை பெற்றது என்பது சம்பந்தமான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**

கல்வி சார்ந்த விடயங்களுக்கு மாத்திரம் இரண்டு மணித்தியாலங்கள் இலவசமாக வழங்குவோம். அதைவிட மேலதிகமாக இடம் பெறும் ஒவ்வொரு மணித்தியாலயங்களுக்கும் அதற்கான கொடுப்பனவை அறிவிடுவோம்.

**தீர்மானம் - 04/52/11**

கல்வி நடவடிக்கைகக்காக அப்துல் மஜீட் மண்டபத்தை பயன்படுத்துவதற்காக உரிய ஆவணங்களுடன் கேரப்படும் பட்சத்தில் முதல் இரண்டு மணித்தியாலயங்கள் இலவசமாக வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்வர் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே எமது ஆண்டிட சந்தியில் அமைக்கப்படுகின்ற அல்லது நிர்மாணிக்கபடுகின்ற தோண்டல்கள், என்ன நிலையில் உள்ளது. அந்த வேலை சம்பந்தமாகஏதாவது எமது சபைக்குத் தெரியுமா? அது சபையில் அனுமதி எடுக்கப்பட்டுள்ளதா, இது என்ன நோக்கத்திற்காக செய்யப்படுகின்றது? ஏன் இந்த வேலைகள் இரவு நேரங்களில் மேற்கொள்ளப்படுகின்றது என்பது சம்பந்தமாக ஏதாவது இந்த சபைக்குத் தெரிந்தால் தெளிவுபடுத்தவும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்**

என்னைப் பொருத்தவரையில் அந்தப் பாதையில் ஒரு வரவேற்பு கோபுரம் போன்ற ஒன்று அமைக்க வேண்டும் என்று கருத்து வைக்கப்பட்டது. நான் அவர்களிடம் கூறியது என்னவென்றால் எது செய்வதாக இருந்தாலும் சட்டபூர்வமாக செய்ய வேண்டும். ஏனென்றால் இந்த நாட்டில் அவைகள் பிழையாக நடந்து இருப்பதால் அரசாங்கமும் சில முறைகளை வைத்துள்ளது. ஒரு விடயம் செய்ய வேண்டுமாக இருந்தால் இவ்வாறு தான் இருக்க வேண்டும் என்று கூறி உள்ளது. நீங்கள் சட்டபூர்வமாக RDD பாதை என்றால் RDD யிடம் அனுமதி பெற வேண்டும். கட்டுமான வேலைகளுக்கு சபையிடம் அனுமதி பெற வேண்டும். இந்த நிலையில் வீரமுனை கோவில் நிர்வாகம் தான் இந்த முயற்சியை எடுத்துள்ளார்கள். அவர்கள் RDD யிடம் அனுமதி எடுத்துவிட்டு, எமது அனுமதிக்கு விண்ணப்பம் எடுத்தவிட்டு அது இன்னும் சபைக்கு வரவில்லை. சபையின் அனுமதி இல்லாமல் அவர்கள் அடித்தளம் தோண்டியுள்ளார்கள். அதன் பின் என்னிடம் முறைப்பாடு வந்து அதை நான் தொழிநுட்ப உத்தியோகத்தர்களை அனுப்பி உடனடியாக அந்த வேலையை நிறுத்துமாறு கோரியிருந்தேன். இதை ஒரு தனவந்தர் தான் செய்து தருகின்றார். அவர் லண்டன் போக உள்ளதால் அவர் செல்வதற்கு முன்பு அதற்கான அடித்தளம் போட வேண்டும் என்று கூறினார்கள்.

நான் கூறினேன் அடித்தளம் போடுவதறகு RDD வீதியை குறுக்கறுத்து செல்ல அனுமதி தரலாம். கட்டுமான வேலைக்கு அனுமதி தருவது சபை. முதல் உங்களுடைய விண்ணப்ப படிவத்தை சமர்ப்பியுங்கள். அதில் வருகின்ற நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின் அவை நாம் செய்வோம். அதில் நாங்கள் மட்டும் அனுமதி தருவதில்லை. UDA யுடன் இணைந்துதான் அனுமதி வழங்க வேண்டும். அவர்கள் விண்ணப்பம் செய்ததும், அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கூறி அந்த வேலை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே 1 தொடக்கம் 4 வரையான வீரமுனை கிராம சேவகர் பிரிவில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 933 சனத் தொகை 2730. இந்த சம்மாந்துறையின் உள் பகுதியில் இருக்கின்ற சனத்தொகை கிட்டத்தட்ட குடும்பம் 17450 சனத்தொகை 61 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம் மக்கள் வாழ்கின்றார்கள். கட்டடக்கலையில் இஸ்லாமிய கட்டிடக்கலை தமிழர்களின் திராவிட சிற்பக் கட்டடக் கலையும் உள்ளது. திராவிட சிற்ப கட்டடக் கலையில் ஒவ்வொரு அங்கமும் குறிப்பாக வரும். இஸ்லாமிய கட்டடக் கலை உருவம் இல்லாத அமைப்பு கட்டடக்கலை பார்த்தவர் விளங்கும். இது ஒரு 2,700 சனத்தொகை அதிலும் முஸ்லீம்களும் அதில் உள்ளார்கள். அவர்கள் அவ்வளவு பேரும் 61 ஆயிரம் பேருடன் முரண்பட்டு வரக்கூடாது. நாம் ஒரு பல்லின மக்கள் கலந்து வாழ்கின்றோம். சரியான முகப்பில் வைக்கும் போது பல்லின மக்கள் வாழ்கின்றோம் என்பதை அந்த வளைவு காட்ட வேண்டும்.

இந்த சபையை பொறுத்தவரையில் எமக்கு இவ்வாறான பிரச்சினைகள் என்று ஒன்று வந்ததில்லை. எமக்குக் கிடைத்த நிதியில் அதிகமான வேலைகளை வீரமுனைக் கிராமத்தில் செய்துள்ளோம். மிகுதியான பணத்தில் மல்வத்தை, வளத்தாப்பிட்டி கிராமங்களுக்கு செய்துள்ளோம். எமக்கு கிடைத்த ஒரு சில வேலைகளில் தான் 61,000 மக்களுக்கும் வழங்கியுள்ளோம். இதை விட எந்த வேலைகளை செய்வதாக இருந்தாலும் யார் பணம் தந்தாலும் அதை செய்வதற்கு சபை அனுமதி வேண்டும். வீரமுனைக் கிராமத்திற்கு எத்தனை பாதைகள், பொது நூலகம், சிறுவர் பூங்கா என்பன அமைத்துக் கொடுத்துள்ளோம். இவ்வாறு இருக்கும் போது அவர்கள் வட்டாரத்திற்குள் உள்ள உறுப்பினர்களுடன் கலந்தாலோசிக்கமல் முடிவெடுத்தது கவலைகுரியதாகும்.

அங்கிருந்த புத்திஜீவிகள், மாணவர்கள் அங்கிருந்து வெளியேறி விட்டார்கள். சொற்பமானவர்கள் அங்கு இருக்கின்ற இடத்தில் நாங்கள் அவர்களை எவ்வளவு கண்ணியமாக நடத்துகின்றோம். சொற்பமானவர்களை பெரும்பான்மை இனத்தவாகள் எவ்வளவு அழகாக பாதுகாக்கின்றார்கள் என்பதற்கு உதாரணமாக உருவாக்கிக் கொண்டு வருகின்ற போது அவர்கள் இவ்வாறன ஒரு முடிவை எடுப்பது கவலைக்குரிய விடயம். இவ்வாறு செய்வதால் ஏனையோர் அவர்களை வெறுப்பாகப்

பார்கின்றார்கள். முன்பு இருந்த சமூகம் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்துவந்தார்கள். 90 ஆம் ஆண்டிற்குப் பிறகு வந்த சமூகம் அவ்வாறில்லை.

மல்லிகைத்தீவு கிராமத்தில் எமக்கு என்ன வருமானம். நாம் எவ்வளவு நிதியை அந்தக் கிராமத்திற்கு செலவு செய்து இருக்கின்றோம். இதனை விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த வீரமுனை கிராமத்தில் LED பல்புகள் ஒரு நபர் எடுத்து வந்து செய்த போது நாமும் எந்த வித எதிர்ப்பும் இன்றி அனுமதித்துள்ளோம். நாம் பெருமைப்பட்டுக் கொண்டு இருக்கின்றோம். வீரமுனையில் மற்ற வெளியிடங்களில் இருந்து வந்து பார்க்கின்றபோது எவ்வாறு புகழ்ச்சி கரமாக உள்ளது. வெளியூரில் இருந்து வந்து ஒருவர் பார்க்கின்ற போது இது பல்லின மக்கள் வாழ்கின்ற ஊர் என்று தெளிவாக தெரிய வேண்டும். அவர்கள் விருப்பத்திற்கேற்ப செய்யக் கூடிய இடங்கள் உள்ளது. அவற்றை நாம் தடுக்க முடியாது.

ஆனால் ஒரு பொதுவான இடத்தில் செய்யும் போது ஒரு பொது இலட்சினை வர வேண்டும். இது ஒரு பல்லின சமூகம் வாழ்கின்ற இடமாக பார்த்தாலே விளங்க வேண்டும். மற்ற பக்கம் பார்த்தால் நீர்ப்பாசன திணைக்களத்தின் பகுதி உள்ளது. ஒரு வேலை செய்யும்போது எத்தனையோ தடைகள் வருகின்றது அவைகளையும் எடுக்க வேண்டும். நாங்கள் அவர்களுடன் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று நினைக்கும் போது நாங்கள் வரமாட்டோம் என்று உதறித் தள்ளுவது மன வேதனையாக உள்ளது. நாங்கள் அவர்களுடன் வாழவேண்டும். அவர்கள் நன்றாக இருக்கவேண்டும். அவர்களுடன் எவ்வளவிற்கு மேலும் மேலும் பின்னிப்பிணைந்து வாழவேண்டும் என்ற சமூக ஒற்றுமையைக் கொண்டு வந்து எதிர்காலத்தில் நல்ல திட்டங்கள் வருகின்ற போது தாங்கள் தான் ஒரு முன்னுதாரணமாக இருக்க வேண்டும், என்று நினைக்கும் போது இவ்வாறான நிகழ்வுகளை மற்றவர்கள் வந்து கதைக்கும் போது நாம் வேதனை அடைகின்றோம். இது இந்த சபை அவர்கள் செய்கின்ற நல்ல வேலைகளுக்கு ஆதரவளிக்க வேண்டும். இது நல்ல முறையில் செய்வதற்கு சபை அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்று கேட்டு இந்த சபை நல்ல முடிவை எடுக்க வேண்டும் என்று கூறி விடை பெறுகின்றேன்.

### கௌரவ உறுப்பினர் என்.கோவிந்த சாமி அவர்கள்

கௌரவ தவிசாளர் அவர்களே வீரமுனை வட்டாரத்தில் ஒரு வரவேற்பு தோரணம் ஒன்று அமைப்பது சம்பந்தமாக பல கருத்துக்கள் இருப்பதாக அறிகின்றேன். அந்த வகையில் நாங்கள் வீரமுனையில் நான்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் தமிழ் மக்கள் பரவலாக வாழ்ந்து வருகின்றார்கள். மல்வத்தை, வளத்தாப்பிட்டி போன்ற பிரதேசங்களை ஒன்றிணைத்து ஒரு பிரதேச சபையை உருவாக்க முனைந்தபோது நாங்கள் இந்தப் பிரதேசத்திற்குள் இணைய மாட்டோம். நாங்கள் சம்மாந்துறைக்குள் தான் இருப்போம் என்று தைரியமாகக் கூறி சம்மாந்துறை பிரதேச சபைக்கு உள்ளேயே இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டோடு இந்த மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அந்த வகையில் அந்தக் கட்டடமானது உண்மையில் பிரதேசசபையின் அனுமதியுடன் செய்திருக்க வேண்டும். அது சம்மந்தமாக அவர்கள் என்னுடன் கலந்துரையாட வில்லை. இந்த விஷயம் தெரியாது இந்த பிரச்சினை வந்ததற்குப் பிறகுதான் இந்த கட்டடம் ஒன்றை கட்ட முயன்றதாகதாக நான் அறிகின்றேன். நான் இரண்டு மாத காலமாக மட்டக்களப்பில் தனியாக ஒரு வீட்டில் வெளியே வர முடியாத நிலையில் இருக்கின்றேன். இருந்தபோதிலும் நாங்கள் சம்மாந்துறை பிரதேசத்தில் முஸ்லிம்கள் எப்போதுமே தமிழ் மக்களை அரவணைத்து செல்வதுதான் வழக்கம். 1954-ஆம் ஆண்டு ஒரு கலவரம் ஒன்று ஏற்பட்டது நான் அப்போது பிறந்திருக்கவில்லை. அப்போது வீரமுனையிலிருந்து நூற்றுக்கு நூறு வீதமான மக்கள் மல்வத்தையில் போய் குடியேறி மல்வத்தை என்று பெயரும் வைத்து அங்கே வாழ்ந்து வந்ததார்கள். அந்த காலகட்டத்திலே மர்ஹூம் அப்துல் மஜீட் MP தூர சிந்தனையோடு இருந்த காரணத்தினால் அங்கிருந்து மக்கள் அரைவாசிப்பேரை வீரமுனையில் மீண்டும் குடியேற்றியிருந்தார்.

அதற்குப் பிற்பாடு 1970-ஆம் ஆண்டு தேர்தல் ஒன்று நடந்தது அந்த நேரம் எனக்கு 13 வயது அப்போது ரேடியோ சின்னத்தில் அப்துல் மஜீத் எம்பியும் தம்பிலுவில் தர்மலிங்கம் சேவல் சின்னத்திலும் போட்டியிட்டார்கள். அப்போது சம்மாந்துறை தொகுதி சம்மாந்துறை அக்கரைப்பற்று தம்பிலுவில் திருக்கோவில், விநாயகபுரம் கணபதிபுரம் எல்லாவற்றையும் அடக்கி தமிழர்கள் வாக்கு அதிகமாக உள்ள பிரதேசமாக இருந்தது. அப்படி இருந்தும் தமிழ் மக்கள் வீரமுனை மக்கள் மர்ஹூம் அப்துல்

மஜீத் MP க்கு வாக்குக் கேட்டு தம்பிலுவிலுக்குச் சென்ற போது அங்கு இருந்தவர்கள் அடித்து துரத்தி அவர்கள் கடற்கரையோரமாக ஓடிவந்து அக்கரைப்பற்றில் ஏறி இங்கு வந்திருந்தார்கள். அவ்வாறு தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் சம்மாந்துறையில் பின்னிப்பிணைந்து வாழ்ந்து வருகின்றார்கள். இன்றும் அந்த அன்னியோன்னியம் நீங்கி போகவில்லை. 1990 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி ஏற்பட்ட கலவரத்தின் போதும் தமிழ் மக்களை பஸ்சில் ஏற்றி திருக்கோவிலுக்கு அனுப்பியிருந்தார்கள். அப்போது எங்களுக்கு 200 எருமை மாடுகள் இருந்தது. 1992ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மீளக்குடியமர்த்தப்பட்ட போது அந்த மாடுகள் எல்லாம் அந்த வயலில் மேய்ந்து கொண்டிருந்தது. இது தமிழர்களின் மாடுகள் என்று தெரியும். வீரமுனை மக்கள் மாடு என்று தெரியும். அவர்கள் ஒன்றையும் தொடாமல் சம்மாந்துறை முஸ்லீம்கள் அவற்றைப் பாதுகாத்து வந்த வரலாறுகள் உண்டு.

அப்துல் மஜீத் MP வெற்றி பெற்றார். தம்பிலுவில் உள்ள தர்மலிங்கத்துக்கு வாக்களித்திருந்தாலும் அவர் வெற்றி பெற்றாலும் சரி இங்கு ஒரு அபிவிருத்தி நடந்திருக்காது. நாங்கள் ஒரு பதினைந்து இருபது வருடம் பஸ்ஸில் ஏறி பிரயாணம் செய்துஅங்கு போக வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். அப்போது நாங்கள் ஆவலோடு எதிர்பார்த்து இருந்தோம் 1977 ஆம் ஆண்டு வாக்கு எண்ணி முடிந்து முடிவு செல்லும்போது அப்துல் மஜீத் 1வது இடம் என்று சொல்லும் போது எங்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அதனை தொடர்ந்து 2000 வீடு அப்போது பிரதம மந்திரியாக இருந்த ஆர். பிரேமதாசா அவர்கள் எல்லாம் வெற்றி என்று சந்தோஷத்தில் 2000 வீடுகளை சம்மாந்துறைக்கு வழங்கியிருந்தார்கள். இந்த நேரத்திலே அப்துல் மஜீட் எம் பீ யின் தூர நோக்கு சிந்தனையினால் நாங்கள் இன்று ஓரளவு முன்னேறி இருக்கின்றோம். இல்லாவிட்டால் நாங்களும் தம்பிலுவில் திருக்கோவில் போன்றுதான் இப்பொழுதும் இருக்க வேண்டி வந்திருக்கும். ஆகவே நாங்கள் தூர சிந்தனையோடு நடந்து கொள்ள வேண்டும்.

முன்னோர்கள் விட்ட பிழையால் நாங்கள் இன்று இந்த துன்பத்தை அனுபவித்தக் கொண்டிருக்கின்றோம். உதாரணமாக 1965 ஆம் ஆண்டு இரண்டு தேர்தல் நடைபெற்று அதில் முதலாவது தேர்தல் நடந்து பாராளுமன்றம் கூடி 06 மாதத்தால் கலைத்து விட்டார்கள் 2-வது பாராளுமன்றம் 1965 ஆம் ஆண்டு நடந்த போது தமிழரசுக் கட்சியும் சேர்ந்துதான் அந்த பாராளுமன்றத்தை நடாத்தி இருந்தார்கள். அதையே தமிழரசுக்கட்சியினர் அரசாங்கத்துடன் தொடர்ந்து வந்திருந்தால் 1983 ஆம் ஆண்டு கலவரம் ஏற்பட்டிருக்காது. நாடு அபிவிருத்தி அடைந்து இருக்கும். 1932 டொனமூர் அரசியலமைப்பு அமைத்த போது அந்த சட்டசபையில் ஐம்பதுக்கு ஐம்பது வீதம் கேட்டார்கள். 12 வீதம் இருக்கின்ற தமிழர்கள் 50 வீதம் சட்டசபையில் கேட்ட காரணத்தினால் தான் இந்த நாட்டில் ஆரம்பத்திலே குழப்பம் ஏற்பட்டது. இல்லாவிட்டால் இந்த நாட்டில் குழப்பம் ஏற்பட்டு இருக்காது. அப்போதைய தமிழ் அரசியல்வாதிகள் அன்று செய்த பிழையினால் இன்று மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். அதேபோன்றுதான் சகல காரியங்களும் நாங்கள் அரசியல் ரீதியாக சிந்திக்கும்போது தூரநோக்கு சிந்தனையுடன் சிந்திக்க வேண்டும். 100 வருடங்களுக்குப் பின் என்ன நடக்கும் என்பதை சிந்தித்து செயற்பட்டு இருந்தால் நாங்கள் எப்போதும் எல்லோரும் நன்றாக வாழலாம்.

இதே போன்று ஆயிரம் உதாரணங்களை என்னால் கூறமுடியும். அரசியல்வாதிகள் விட்ட பிழையினால் நாடு இன்று மோசமான நிலையில்உள்ளது. சில பிரதேசங்களில் பட்டினிச்சாவு ஏற்படும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இதற்கு அரசியல் வாதிகள் விட்ட பிழையே காரணம். தூரநோக்கு சிந்தனையுடன் செயற்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்து முடிக்கவேண்டும் என்று கேட்பதோடு,

இது ஒரு சமயத்தோடு சம்பந்தப்பட்ட விடயம் அரசியலமைப்பில் சமயத்தை அடிப்படை உரிமை என்று ஒரு விடயம் இருக்கின்றது. அதில் முதலாவது அடிப்படை முதலாவது சரத்தில் செல்லப்படுகின்றது சட்டத்திற்கு முன் சகலரும் சமம். இரண்டாவது சரத்தில் ஆள் ஒருவர சித்திரவைதக்குள் உற்படுத்தல் ஆகாது. மூன்றாவது சரத்து நபர் ஒருவர் நாடு பூராகவும் எங்கும் சீவிக்கலாம். நான்காவது சரத்தில் மதங்களை அனுபவிப்பதற்கும் விருத்தி செய்வதற்கும் உரிய உரிமை. அடிப்படை உரிமைகளில் இது மத சார்பான உரிமை. அதை நாம் கவனத்தில் கொண்டு செய்ய வேண்டும். அங்கு ஒரு தோரணம் அமைத்தால் நாம் பிரதான வீதியில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற சம்மாந்துறை

பிரதிபலிக்கக் கூடியதாக நாங்கள் பிரதான வீதியில் ஒரு வரவேற்பத் தோரணம் அமைக்கலாம். நாங்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இதனை ஒரு ஏகோபித்த முடிவாக எடுக்க வேண்டும் என்று கூறி விடை பெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே எனக்கு முதல் பேசிய கௌரவ உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள் பேசியது போன்று 1990ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வன்செயல்கள் காரணமாக, மக்கள் இடம் பெயர்ந்ததன் காரணமாக தமிழ் மக்களின் சொத்துக்களை பாதுகாத்த சமூகம் என்று சம்மாந்துறையில் முஸ்லிம்கள் சொல்லப்படுகிறார்கள் நம்பிக்கைக்குரியவர்கள் என்று பேசியிருக்கிறார். அது வரவேற்கத்தக்கது. இதே போன்று நாங்களும் எந்த பிரச்சினையும் இல்லை நாமும் யாருடனும் எந்த முரண்பாடும் இல்லை எங்களுக்குள். இருக்கின்ற எங்களுடைய சிறுபான்மை சமூகத்தை நாங்கள் அரவணைக்கா விட்டால் நாங்கள் இந்த பெரும்பான்மைச் சமூகத்துடன் எவ்வாறு போட்டியிடுவது. எமது பிரச்சினை என்னவென்றால், அந்த வட்டாரத்தில் உள்ள மூன்று உறுப்பினர்களும் அதிலும் கௌரவ தவிசாளர் ஒருவர் அந்த வட்டாரத்தில் இருக்கிறார். அவருக்கு தெரியாமல் தான் தோன்றித்தனமாக இந்த செயலை செய்ய முன்வந்தது பிழை. இதைத் தான் கூறுகின்றோம். கௌரவ உறுப்பினர் நீங்களும் யோசிக்கவேண்டும். தன்னுடைய வட்டாரத்தில் தன்னை மதிக்கவில்லை என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். நாங்கள் பிட்டும் தேங்காய் பூ போல் வாழவேண்டும் என்று வாழ்ந்த வரலாறு உண்டு. பிரச்சினையை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்ட சிலர் காணப்படுகின்றனர்.

அண்மையில் ஒரு சம்பவம் ஒன்று இடம் பெற்றது. ஒரு தமிழ் யுவதி ஒருவரை 12 வருடங்களாக ஒரு முஸ்லிம் குடும்பம் வளர்த்து வந்தது. அவருக்கு 26 வயது இருக்கும். அவர் தற்போது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளார். அவரின் சகோதரர்கள் அந்த வீட்டிற்கு வந்து பிரச்சினை ஏற்படுத்தினார்கள். நான் எதேர்ச்சியாக அங்கு சென்றிருந்தேன். என்ன பிரச்சினை என்று கேட்டேன். இவர் இஸ்லாத்திற்கு வந்துள்ளார். இவரின் சகோதரர்கள் வந்து பிரச்சினை படுத்துகிறார்கள். நான் கூறினேன், தம்பி இது பள்ளிவாசல் சம்பந்தப்பட்ட பிரச்சினை உங்களுடைய கோவிலும் பள்ளிவாசலும் இணைந்து பேசிக்கொள்ளுங்கள். உங்களுடைய பேச்சு இனக்கலவரத்தை உருவாக்குவது போன்று காணப்படுகின்றது. என்று கூறியதற்கு அதற்கு அவர் இனக்கலவரம் இதனால் உருவாக்குவேன் என்று கூறினார். அவ்வாறான ஒரு சில தமிழ் சகோதரர்கள் காணப்படுகின்றார்கள். நாங்கள் அந்தப் பிரச்சினைக்கு வரவில்லை எங்களுடைய விடயம் என்னவென்றால் கௌரவ உப தவிசாளர் அவர்கள் பேசியது போன்று நாங்கள் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம் சமூகம் இருக்கின்றோம் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் சகோதரர்கள் காணப்படுகின்றார்கள். எமது அந்த பெயர் பலகையில் வருகின்றது பல்லின மக்களின் சார்பாக வருகின்ற போது எல்லோருக்கும் ஒரு உகந்ததாக காணப்படும். அதே நாம் பேசித் தீர்க்க வேண்டும் ஒரு பள்ளி நிர்வாகம் உள்ளது கோயில் நிர்வாகம் உள்ளது இருவரும் ஒன்றாக கலந்து அதனை எவ்வாறு செய்வது என்று முரண்பாடுகளுக்கு அப்பால் நாங்கள் கலந்துரையாடலை ஏற்படுத்தி அதனை செய்யலாம்.

சபை அனுமதி இல்லாமல் RDD அனுமதி மட்டும் எடுத்துக் கொண்டு வந்து செய்வது பிழையான விடயம். எந்த இடத்தில் அது பொருத்தம் என்பதையும் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு இதனை செய்ய வேண்டும். தூரநோக்கு சிந்தனையுடன் யோசித்து எல்லோரும் இணைந்து செய்ய வேண்டும். ஒரு சட்டப்படியான அங்கீகாரம் இல்லாமல் இதனை செய்வதற்கு தடையை ஏற்படுத்த வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே இங்கு சொல்லப்பட்ட விடயங்கள் சபையின் அங்கீகாரம் பெறாமல் வட்டார உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து செய்யப்படவில்லை. ஆனால் இப்போது அங்கு பெரிய ஆழி தோண்டப்பட்டு அது பாதுகாப்பு இல்லாமல் உள்ளது. இதற்கு இந்த சபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த சபை இதனை அவசரமாக செய்ய வேண்டும். இது பிரதான பாதை

வாகனங்கள் செல்லும் ஒரு பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும். சபை உரிய பாதுகாப்பை வழங்கி அதை செய்து முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்..

**கௌரவ தவிசாளர் அவர்கள்**

இந்த விடயத்தில் அனைவருக்கும் தெரியும் வீரமுனை வட்டாரத்தில் முதன்மை அங்கத்தவர் கௌரவ தவிசாளர். அந்த ACMC கட்சியின் மூன்று அங்கத்தவர்கள் பெற்றுத் தந்ததும் இந்த வீரமுனை வட்டாரம். அதிலும் குறிப்பாக இன்று சபையில் 5 வீரமுனை மக்களின் வாக்குகளைப் பெற்ற 05 பேர் உள்ளோம். நான் உட்பட கௌரவ உறுப்பினர் கோவிந்தசாமி, கௌரவ உறுப்பினர் சஹீல், கௌரவ உறுப்பினர் முஸ்தபா, கௌரவ உறுப்பினர் அன்வர். வீரமுனைகு ஒரு சரித்திரம் இருக்கின்றது என்பது ஒருவரும் மறுக்க முடியாத ஒரு விடயம். அந்தக் காலத்தில்  மர்ஹும் அப்துல் மஜீத் அவர்களின் அரசியல் பிரவேசத்திற்கும் அவர்,முதன்முதலாக அங்கத்தவர் போட்டி இன்றி வீரமுனை வட்டாரத்தில். பிறகு 34 வருடங்கள் சம்மாந்துறையில் ஒரு பாராளுமன்ற உறுப்பினர்களாக அலங்கரிப்பதற்கு பங்காளியாக தமிழ் வாக்காளர்களும் இருந்தார்கள் என்பது நான் மேடையிலும் கூறி வருகின்ற ஒரு விடயம். அந்த வகையில்தான் பாரம்பரிய சரித்திரம் உள்ள ஒரு சமூகத்தைப் பிரதிபலிப்பதற்கு ஏதாவது முயற்சி எடுக்கப்பட்டால் அதற்கு தடையாக நாம் ஒருபோதும் இருக்க மாட்டோம்.

ஆனால் இந்த நாட்டில் ஒரு சட்டம் உள்ளது. அந்த சட்டத்தின் படி அவர்கள் அதை செய்திருக்க வேண்டும் அதில் ஒரு தவறு செய்துவிட்டார்கள். அது இடைநிறுத்தப்பட்டு இருக்கின்றது. அவர்கள் சட்டபூர்வமாக அந்த விண்ணப்பத்தை இந்த சபைக்கு விண்ணப்பிக்கும் போது அதன்பின் சட்டம் என்ன கூறுகிறதோ அதை நாம் நிறைவேற்ற வேண்டியது இந்த சபையின் கடமை. கௌரவ உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள் மிகவும் ஆழமான ஒரு கருத்தை முன்வைத்தார்கள். அதில் அவர் ஆரம்பித்துவிட்டு முடிவில் அதைத் தொடவில்லை. இந்த முரண்பாடுகளை காட்டியவர்கள் என்ற ரீதியில் அந்த சில விடயங்களை நாம் பேசவேண்டியிருக்கிறது. என்ன வென்றால் உங்களுக்கு தெரியும் இந்த எல்லை நிர்ணயக் குழு ஒன்று இயங்கிக் கொண்டிருக்கின்றது. அந்த ஆணைக்குழுவிற்கு மல்வத்தை மக்கள் சில அரசியல்வாதிகளின் தூண்டுதலினால் மல்வத்தை, வளத்தாப்பிட்டி, மல்லிகைதீவு மக்கள் ஒரு தனி நிர்வாக அலகு உருவாக்கப்பட வேண்டும் என்று வீரமுனையையும் சேர்த்து ஒரு முன்மொழிவு வைத்துள்ளார்கள். அதன் பிரதி ஒன்று என்னிடம் உள்ளது. அதில் அவர்களுக்கு உள்ள பாரிய சவால் என்னவென்றால், மல்வத்தை கோவில்கள், வளத்தாப்பிட்டி கோவில்கள், மல்லிகைத்தீவு கோவில்கள் கடிதம் கொடுத்துள்ளது ஆனால் வீரமுனை கோவில் கடிதம் கொடுக்கவில்லை சம்மதம் தெரிவிக்கவில்லை. அவர்கள் சேர்த்து வாழவே விரும்புகிறார்கள்.

இந்த வட்டார பிரிவின் கீழ் வீரமுனை மக்களின் விருப்பம் இருந்தது நாங்கள் சம்மாந்துறையின் பெரும்பான்மையோடு பங்காளிகளாக இருக்க வேண்டுமேயெழிய வெறுமனே ஒரு தமிழ் அமைப்பிற்குள் வருவதற்கு எங்களுக்கு விருப்பமில்லை என்று கூறியுள்ளார்கள். ஏனென்றால் வீரமுனைக்கு தனி சரித்திரம் காணப்படுகின்றது. பகிரங்கமாக தெரிவித்து உள்ளேன். அதை மறுக்கவும் முடியாது மறைக்கவும் முடியாது. அரசியல் காரணங்களுக்காக யார் என்ன சொன்னாலும் உண்மையை மறைக்க முடியாது அனைத்தும் எழுதப்பட்டுள்ளது. அந்த கோவிலுக்கு உள்ள சரித்திரம் அது ஒரு பெரிய சரித்திரம். இவை எல்லாவற்றையும் உள்வாங்கியவனாக, இன்று உள்ள பிரச்சினை என்னவென்றால் நமக்குள் வாழும் சிறுபான்மையினருக்கு நாம் பாதுகாப்பாக இல்லாவிட்டால், நாம் பெரும்பான்மை இடம் இருந்து பாதுகாப்பு கேட்பது எப்படி? நான் பாராளுமன்றத்தில் ஒரு தடவை கூறினேன் யுத்தம் முடிவடைந்த காலத்தில் கூறினேன், பிரபாகரன் ஈழம் தருவதாகக் கூறினார். இன்று அந்த சமூகம் கைதிகளாக மாற்றப்பட்ட சமூகத்திற்கு நாமெல்லாம் கொடுத்தால்தான் அவர்களை திருப்திப்படுத்த முடியும். அந்த மனநிலையில் நாமும் இந்த ஊரை முன்னெடுத்துச் செல்லாவிட்டால், எமது அந்திம காலம், இனி வரும் சந்ததிகளுக்கு நாம் சரியான வழிகாட்டிகளாக இருக்க வேண்டும். அரசியல் இனரீதியாக எல்லாவற்றையும் நோக்கி செல்வோம் ஆனால் நிச்சயமாக அதனுடைய தாக்கங்கள், உங்களுக்குத் தெரியும் இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தது எவ்வாறு, இப்போது எவ்வாறு இருக்கின்றது.

இந்த நிலைகள் எல்லாவற்றையும் உள்வாங்கி மிகவும் கவனமாக இந்த சமூக வலைதளங்களில் உங்களது கருத்துக்களை முன்வைக்கும் போது, தூரநோக்கோடு இதை எவ்வாறு மக்கள்

விளங்குவார்கள் என்று, நான் ஒரு இடத்தில் கூறியிருந்தேன் இந்த ஊரில் ஆயிரக்கணக்கில் வீடுகள் அனுமதி இல்லாமல் கட்டப்படுகின்றது என்று கூறியவுடன் அவர்கள் கூறினார்கள் அவர் இவ்வாறு கூறுகிறார் என்று. அதற்கு நான் பயப்படவில்லை அந்த பகுதிக்கு உறுப்பினர் நான். எனக்கும் ஒரு பொறுப்பு உள்ளது அதை உடனடியாக தடை செய்து நிறுத்தினேன். நீங்கள் செய்தது பிழை. எண்ணம் எவ்வாறு இருந்தாலும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு வழி ஒன்று உள்ளது. அதை கட்டாயப்படுத்தி செய்ததாகச் சொல்ல மாட்டேன். ஆனால் அவர்கள் RDD யின் அனுமதி எடுத்தால் போதும், சபை அனுமதி தந்து விடுவார்கள் என்று நம்பிக்கை. ஆனால் சபையில் தான் சட்டம் உள்ளது. எமது சரித்திரத்தையும் மறக்காமல் எமது எதிர்காலத்தையும் பழுதாக்காமல் சுமுகமாக அந்தக் கோயில் மற்றும் பள்ளிவாசல் நிர்வாகிகளுடன் இணைந்து எல்லோரும் சேர்ந்து பேசி அதற்குரிய சுமுகமான ஒரு முடிவை எடுப்போம் என்று கூறி இந்த விடயத்தை முடித்துக் கொள்கிறேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே 2019.05.14 ஆம் திகதி எமது சபை கூட்டத்தில் தீர்மானம் 5 இல் எடுக்கப்பட்ட காணி உப பிரிவிடல் தொடர்பாக ஆகக்குறைந்த பிரிவிடலாக வசிப்பிடங்களுக்கு குறைந்தது 04 பேச் காணிக்கும், பிரதான பாதையில் வர்த்தக நிலையங்களுக்கு குறைந்தது 02 ½ பேச் கணிக்கும் அனுமதி வழங்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது. இதுவரைக்கும் இதற்குரிய உரிய நடவடிக்கைகள் ஒன்றும் எடுக்கப்படவில்லை. இன்றைய தினத்தில் அதனை தீர்மானமாக எடுத்து மீண்டும் அதனை காணி ஆணையாளருக்கு ஞாபகப்படுத்துமாறு வேண்டுகிறேன். அடுத்ததாக நான்காம் மாதம் இடம் பெற்ற எமது சபைக் கூட்டத்தில் என்னால் முன்வைக்கப்பட்ட முகைதீன் நூலகத்திற்கு இடம் பற்றாக்குறை காரணமாக அல்-மர்ஜான் பாடசாலைக்கு முன்பாக உள்ள காணியை வழங்குமாறு பிரதேச செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதை நாங்கள் சபையில் ஏகமனதாக தீர்மானம் எடுத்து அதனை அனுப்ப வேண்டும். சென்ற மாதம் நான் கூட்டத்தில் பேசியிருந்தேன் சில்வாவின் வண்டு சம்பந்தமாக பேசியிருந்தேன். எமது காலத்திற்குள் நாம் செய்ய வேண்டும். நான் சென்ற மாதம் பேசியபோது எங்களுடைய உறுப்பினர்களின் கொடுப்பனவை தியாகம் செய்தால் அதனை செய்து விடலாம் என்று கூறியிருந்தேன். அதை பார்வையாளராக வந்து பார்த்துக் கொண்டிருந்த நிந்தவூர் பிரதேச சபையின் உப தவிசாளர் பிரதேச சபைக்குச் சென்று நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சி காரணமாக உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுத் தொகை வேண்டாம் என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்கள். நாமும் எமது மாதாந்தக் கொடுப்பனவை நாட்டின் நலனை கருத்தில் கொண்டு தியாகம் செய்வதற்கான தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலூவ்பா**

கௌரவ தவிசாளர் அவர்களே, எமது நாடு அசாதாரண சூழ்நிலையை எதிர்நோக்கி இருக்கின்ற இந்த சூழலில், எமது நாட்டிலுள்ள சிறுவர்களுக்கும், பெண்களுக்குமான பாதுகாப்பு முற்றுமுழுதாக இழக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. அதற்கு முழுமையான காரணம் போதைக்கு அடிமையாகியுள்ள தாய், தகப்பனின் சிறுவர்கள்தான் இவ்வாறான துஸ்பிரயோகங்களுக்கு ஆளாகின்றார்கள். எனவே எமது நாட்டில் அண்மையில் ஏற்பட்டுள்ள ஒரு சிறுமியின் இழப்பு. அட்டுளுகம பிரதேசத்தைச் சேர்ந்த 9 வயது ஆயிஷா என்ற அந்த சிறுமி போதைவஸ்துக்கு அடிமையான அந்த தகப்பனின் பராமரிப்பில் இருந்து வந்ததன் காரணமாக அந்த சிறுமியின் மரணம் நிகழ்ந்துள்ளது என்று ஒரு சில ஊடகங்களின் கருத்துக்களை உள்வாங்கிய நிலையில் இந்த விடயத்தை நான் தொட்டுச் செல்கின்றேன். இதேபோன்று வவுனியாவில் 14 வயது சிறுமி ஒன்று பிரத்தியோக வகுப்புக்குச் சென்று வந்த நிலையில் அந்த சிறுமியை துஷ்பிரயோகத்திற்கு ஆளாகி சிறுமியின் உயிர் பறிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. அந்த சிறுமியின் தாய் வெளிநாட்டில் வேலை செய்கின்றார். சிறுமியின் தந்தை வேறு திருமணம் முடித்துள்ளார். அந்த குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லாத காரணத்தினால் இவ்வாறான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்று கருத்துக்கள் வெளியாகியிருந்தது. எனவே எமது மாவட்டத்தைச் சேர்ந்த அட்டாளைச் சேனை பிரதேசத்திலும், இவ்வாறான துஷ்பிரயோகம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

இவ்வாறான நிலையில் எங்களுடைய மாவட்டத்திலும், எங்களுடைய கிராமப்புறங்களிலும் தூர இடங்களுக்கு பாடசாலைகளுக்கும், பிரத்தியோக வகுப்பிற்கும் செல்கின்ற பிள்ளைகளின் பாதுகாப்பிற்கு அதாவது நான் ஒரு பாடசாலை ஆசிரியரிடம் பேசிய போது அவர் என்ன கூறுகிறார் எங்களுக்கு குறிப்பிட்ட நேரத்தில் தான் நாங்கள் அந்த பிள்ளைகளுக்கு உரிய பாதுகாவலராகவும், நல்ல ஒரு ஆசிரியராகவும் இருப்போமே தவிர, அந்தப் பாடசாலை விடுகின்ற நேரத்தில் நாங்கள் எனக்கு குறிப்பிட்டுள்ள 40 மாணவிகள் இருந்தால் அவர்கள் தாய், தகப்பன் அவர்களை அழைத்துச் செல்லும் வரை நான் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஏனெனில் எனக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளது அவர்களின் பாதுகாப்பு கருதியே நான் அடுத்த கட்டத்திற்கு செல்ல வேண்டியுள்ளது. இதற்கு இந்த ஊரில் உள்ள நிறுவனங்கள் பிரதேசத்தில் உள்ள சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள், ஒவ்வொரு கிராம சேவை உத்தியோகத்தர் ஊடாக பிள்ளைகளுக்குரிய விழிப்புணர்வை கொடுப்பதைவிட பெற்றோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் குழந்தைகளை பாதுகாத்துக்கொள்ள முடியும்.

க.பொ.த சாதாரண தர பரீட்சை முடிந்த போது மாணவர்கள் அவர்களுடைய சந்தோசத்தை வெளிப்படுத்தும் சந்தர்ப்பத்தில் 2 மாணவர்களுக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டு அதில் ஒரு மாணவர் மற்றொரு மாணவனை கத்தியால் குத்தி அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றார். மற்ற மாணவன் சிறுவர் நன்னடத்தைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு அவருக்குரிய கவுன்சிலிங் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது. இதற்கு பிரதான காரணம் தன்னுடைய பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லும் போது அவர்கள் கத்தியுடன் செல்கின்றனரா? இவ்வாறு செல்கின்றவர்களுடைய நடவடிக்கைகள் எவ்வாறு உள்ளது என்பதை அந்தப் பெற்றோர் அறிந்து கொள்ளாத நிலையில் இருக்கிறார்கள். இவர்கள் மிகவும் தூரத்தில் இருக்கின்றார்கள். ஏனென்றால் இதற்கு காரணம் இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காலையில் எழுந்தவுடன் தந்தை ஒரு வரிசையிலும் தாய் ஒருவரிசையிலும் நிற்கின்றார்கள்.

மேலும் ஒரு விடயத்தை தொட்டுச் செல்லலாம் என்று நினைக்கின்றேன். எரிபொருள் விலையேற்றம் காரணமாக முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் அவர்களுடைய ஆட்டோ முச்சக்கர வண்டிகளுக்கு உரிய பயண கட்டணத்தை அதிகரிக்கின்றார்கள். அவர்களாகவே அதற்குரிய தீர்மானங்களை எடுத்து குறிப்பிட்ட தூரத்திற்குரிய அந்த கொடுப்பனவை தாங்களாகவே நிர்னயித்துக் கொள்கின்றார்கள். எமது ஊரில் எந்தப் பொருளுக்கும் விலை நிர்ணயம் இல்லை. வாங்குகின்ற எந்த பொருளுக்கு விலை நிர்ணயம் இருந்தால்தான் விற்கப்படுகின்ற பொருளை விலை நிர்னயத்துடன் விற்கலாமென்று அந்த ஓட்டுனர்கள் கூறுகின்றார்கள். ஒரு லீட்டர் பெற்றோலுக்கு 420.00 ரூபாய் விற்பனை செய்யப்படுகின்ற போது அதிகமான விலையைக் கேட்டார்கள் என்றால் எமது பயணம் செய்கின்ற பயணிகள் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். இதனை போக்குவரத்துக் கடமையில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மூலம் அவர்களுக்கு உரிய Meters பூட்டி அதிலிருந்து வருகின்ற செலவுகளை பயணிகளிடம் இருந்துஅறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று விடைபெறுகின்றேன்

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**

இந்த முச்சக்கர வண்டிகள் சம்பந்தமாக ஏற்கனவே முடிவுகள் எடுக்கப்பட்டு அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இது வரைக்கும் அது சம்பந்தமாக எந்த விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. ஆகவே அதனை மீண்டும் ஒருமுறை ஞாபகப்படுத்தி சாதாரண குடும்பத்தில் வாழுகின்ற அதி கஷ்டப் பிரதேசங்களில் இருந்து வைத்திய தேவைக்காக சென்ற போது அதிகமான பணத்தை செலவு செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை இழக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. ஆகவே இதனை கருத்தில் கொண்டு நாங்கள் இந்த சபையின் ஊடாக இந்த மக்களுக்கு விமோசனம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

கடந்த வாரம் எமது ஊரில் இருந்து எனது பாடசாலை காலத்து நண்பர் பர்வீஸ் மஹரூப் என்பவர் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக பதவி பெற்று சென்றிருக்கின்றார். உண்மையிலேயே இந்த சந்தர்ப்பத்தில் இந்த இடத்தில் அவரை நான் வாழ்த்துவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். ஆரம்பக்கல்வி அஸ் ஸமா வித்தியாலயத்தில் 01 தொடக்கம் 05 ஆண்டுவரை கல்வி கற்றிருந்தார் அந்த காலத்திலேயே அவர் ஆங்கிலத்தில் மிகவும் சரளமாக பேசக்கூடிய ஒரு

வல்லமை படைத்த சிறந்த மாணவராக எங்களோடு இருந்தவர். அதன் பிற்பாடு தரம் 6 தொடக்கம் சாதாரண மற்றும் உயர் தரம் வரை சம்மாந்துறை மத்திய மகாவித்தியாலயத்தில் கல்விகற்று சிறந்த பெறுபேறுகளைப் பெற்று தென்கிழக்கு பல்கலைக்கழகத்தினுடைய மாணவனாக சென்று, அங்கு கல்வி கற்று முடித்தவுடன் அவருடைய தொழில் நிமித்தமாக தலை நகரத்தில் உள்ள அமெரிக்க தனியார் நிறுவனம் ஒன்றில் இரண்டு வருடங்களாக கணக்காளராக தொழில் புரிந்து, அதன் பின்னர் வெளிநாடு சென்று கட்டார் நாட்டின் உயர் தேசிய பாதுகாப்பு இன்சூரன்ஸ் கம்பெனியில் ஐந்து வருடங்கள் அங்கும் கணக்காளராக அவர் கடமையாற்றியிருந்தார்.

அந்த சந்தர்ப்பத்திலேயே தனக்குத் தேவையான மேற்படிப்பினை அங்கிருந்து கற்றுக்கொண்டர். மீண்டும் நாடு திரும்பி எமது SLIAT நிறுவனத்தில் எட்டு வருடங்களாக அதனுடைய விரிவுரையாளராகவும் SLIAT நிறுவனத்தின் தலைமைக் காரியாலயத்திற்கு கணக்காளராக இருந்த காலகட்டத்தில், அவர் படித்த பிரதேசத்தில் இருந்த உதாரணமாக அவர் சென்னெல் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர்.இந்தப் பிரதேசத்தில் இடைநிலையில் கல்வியை விட்ட மாணவர்களுக்காக சென்னெல் பவுண்டேசன் என்கின்ற திட்டத்தை ஆரம்பித்து அதன் ஊடாக இந்த மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்கியவர். அத்தோடு தான் கற்பித்த மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக இருந்து பல மாணவர்களை பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெறமுடியாமல் பல்கலைக்கழகம் செல்ல முடியாமல் இருந்த மாணவர்களுக்கு சிறந்த ஒரு வழிகாட்டியாக SLIAT நிறுவனத்திலும், அதேபோன்று தன்னுடைய தனிப்பட்ட முயற்சியினாலும் அந்த மாணவர்களுக்கு சிறந்த வழியை காட்டி சம்மாந்துறையில் சிறந்த ஒரு கல்விச் சமூகத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தவர்.

இன்ஷா அல்லாஹ் அவருடைய எண்ணம், அவர் பல்கலைக்கழகத்துக்கு விரிவுரையாளராக செல்ல வேண்டுமென்ற எண்ணம் அவர் சாதாரணதர காலத்தில் இருந்து தோன்றியது. இதனூடாக சம்மாந்துறைக்கு இந்த மண்ணுக்கும் சிறந்த கல்விச் சமூகம் உருவாக வேண்டும் என்கின்றன நம்பிக்கையோடு இந்த சபையின் ஊடாக அவரை வாழ்த்தியவனாகவும்,

கௌரவ தவிசாளர் அவர்களே இன்று இந்த ஏறத்தாழ ஒரு வருடத்திற்கு மேலாக நெய்நாகாடு ஆரம்ப பாடசாலையில் பிரச்சினை இருந்து கொண்டிருக்கின்றது. அந்த பாடசாலைக்கு ஆசிரியர்களை அனுப்புவது. அங்கிருந்த ஆசிரியர் அவருடைய தொழில் நிமித்தமாக பதவி உயர்வு பெற்று சென்றதன் பின்னர் அந்தப் பாடசாலை சரியான முறையில் இயங்கவில்லை என்ற ஒரு நிலைப்பாடு இருந்த கட்டத்திலே, மீண்டும் இரண்டு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிலை காரணமாக அவர்களுக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவுகளை விட பல மடங்கு அதிகம் அவர்களுடைய போக்குவரத்து செலவு காணப்படுகின்றது. ஆகவே அவர்களும் அந்தப் பாடசாலையை கைவிடும் கட்டத்தில் இருக்கின்றார்கள். அவ்வாறான ஒரு கட்டம் இடம்பெறுமாக இருந்தால் உண்மையாக எந்த விதமான அடிப்படை வசதிகள் இல்லாத அந்த கிராமத்தின் மாணவர்களுக்கான ஆரம்ப கல்வியை பெற்றுக் கொள்வதில் ஒரு பாரிய சிரமம் ஏற்படும்.

எனவே, இதற்கு இந்த சபையின் ஊடாக எவ்வகையான தீர்வைப் பெறலாம் என்பதை இந்த சபை இதற்காக ஒரு தீர்வை முன்வைக்க வேண்டும் என்று கேட்டு, அத்தோடு எமது ஊரிலிருந்து குடிவில், இறக்காமம், வரிப்பத்தான்சேனை போன்ற பிரதேசங்களுக்கு கல்வி கற்பிப்பதற்காக செல்கின்ற ஆசிரிய ஆசிரியைகள் 55 பேர் இருக்கின்றார்கள். இன்று இருக்கின்ற அவர்களுடைய போக்குவரத்து சிரமம், தாங்கள் எடுக்கின்ற சம்பளத்தில் அரைவாசிக்கு மேல் போக்குவரத்துக்கு செலவிடுகின்றனர். சம்மாந்துறையில் இருந்து ஏறத்தாழ இறக்காமம் வரைக்கும் ஒரு இலங்கை போக்குவரத்து சபையினுடைய பேருந்து சேவை இருந்தது. அது தற்போது நிறுத்தப்பட்டுவிட்டது. எனவே இந்த ஆசிரியர்களை நலனுக்காகவும் மாணவர்களின் நலனுக்காகவும் இலங்கை போக்குவரத்து சபையினுடைய அதிகாரிகளை தொடர்பு கொண்டு இந்த அசாதாரண சூழ்நிலை இருக்கின்ற காலகட்டத்திற்கு இந்த போக்குவரத்து சேவையை ஆரம்பிக்க வேண்டும். இதனை சபையின் ஊடாக வலுயுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே எமது கௌரவ உறுப்பினர் நளீம் கூறியவாறு இந்த நெய்நாகாடு பாலர் பாடசாலைகளில் இருந்து சம்மாந்துறைப் பிரதேச சபையும் கூட சென்ற வாரம் உதவி செய்து இருக்கின்றது. இங்கு அவர்களுக்கு கொடுப்பனவாக 4000.00 ரூபாய் மாகாணத்திலிருந்து அவர்களுக்கு வழங்கப்படுகின்றது. ஆனால் போக்குவரத்துக்கு அவர்களிடம் ஆட்டோ காரர்கள் 8000.00 ரூபா. கேட்டதற்கிணங்க அவர்கள் அந்தப் பாடசாலை ஆசிரியர்கள் கடமையாற்ற முடியாத நிலையில் தற்பொழுது இருக்கிறார்கள். ஆனால் சென்ற வருடம் அவர்களுக்காக நான் பிரதேச செயலாளருடன் கதைத்த போது, அவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று கூறிய இடத்தில், அன்று கூறிய விடயம் என்னவென்றால் சனசமுக நிலையத்தில் பணம் இருக்கின்றது அதிலிருந்து அவர்களுக்காக ஒரு சிறு தொகையை வழங்கி உதவி செய்யலாம் என்று அன்று கூறினர். இன்றைய காலகட்டத்தில் எவ்வாறு என்று தெரியாது. அந்த சனசமூக நிலையத்திற்கு தலைவர், செயலாளர், பொருளாளர் யார் என்று பார்த்த போது அங்கு யாருமில்லை. சனசமூக நிலையத்தில் பணம் உள்ளது. எங்களுடைய பிரதேச சபையில் அதற்குப் பொறுப்பான அதிகாரி அது சம்பந்தமான வேலைகளை இன்றும் செய்து கொண்டுதான் இருக்கின்றார்.

நான் சபையில் இது சம்பந்தமான முன்மொழிவை கொண்டு வந்த போது, எங்களுடைய கௌரவ தவிசாளர், செயலாளரின் உதவியோடு அந்த ஆசிரியர்களுக்கு இங்கிருந்து போக்குவரத்து வசதி வழங்கப்பட்டது. அவர்கள் காலையில் அங்கு கொண்டு சென்று விட்டு விட்டு மதியம் அவர்கள் ஏற்றி வரப்பட்டார்கள். ஒரு அசாதாரண சூழ்நிலை காரணமாக அந்த போக்குவரத்து தடை ஏற்பட்டுள்ளது. அந்த ஆசிரியர்கள் என்னிடம் கேட்டபோது நான் இங்கு வந்து கேட்கு நிலைமையில் இல்லை. எரிபொருள் பிரச்சினை இருப்பதினால் எவ்வாறு கேட்பது என்ற தயக்கம் காணப்படுகின்றது. அந்த மக்களிடம் விசாரித்த போது மாணவர்களுக்கு படிப்பில்லாத கஷ்டத்தில் இருக்கின்ற நிலைமையில் அந்தப் பிள்ளைகளுக்கு தேவையில்லாத பழக்கவழக்கங்கள் வருகின்றது. இந்த பாலர் பாடசாலையாவது திருப்திகரமாக செய்து தர வேண்டும் என்று அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். ஆனால் இந்தப் பிரதேச சபையால் அவர்களுக்கு நிதி உதவி வழங்காவிட்டாலும் இந்த போக்குவரத்து வசதிகளை செய்து வழங்கலாம் என்று கூறி விடை பெற்று கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே சனசமூகநிலையம் சம்பந்தமாக அன்று நடந்த கூட்டத்திற்கு எங்களுடைய பிரதேச சபையில் பொறுப்பாக இருக்கும் உத்தியோகத்தர்கள் சென்று வந்துள்ளார்கள். புதிதாக ஒரு குழுவை நியமிப்பது என்று. மிக நீண்ட காலமாக இழுபட்டுக் கொண்டிருக்கின்றது. அதனை கவனத்தில் எடுத்துக் கொள்ளவும். அடுத்ததாக பாலர் பாடசாலை அங்கு இருக்கின்ற பாலர் பாடசாலைக்கு இங்கு இருக்கின்ற ஆசிரியர்களை அனுப்புவது என்பது நடைமுறையில் சாத்தியமான விடயமாக தெரியவில்லை. சென்ற கிழமை நான் இறக்காமம் பிரதேச சபைக்குட்பட்ட அறபா கிராமத்தில் எங்களது தனி முயற்சியிலேயே 25 லட்சம் ரூபாய் செலவிட்டு நிரந்தரமான ஒரு பாடசாலை கட்டடம் ஒன்றை கட்டி அங்கு இருக்கின்ற 11 பிள்ளைகளுக்காக, அந்த 32 குடும்பத்துக்குள்ளேயே இருந்து ஒரு ஆசிரியரை தேர்வு செய்து கடந்த கிழமை இறக்காமம் பிரதேச சபை அதற்குப் பொறுப்பான அதிகாரியை அழைத்து அவர்களிடத்தில் அதனைப் பாரம் கொடுத்திருக்கின்றோம். அவர்கள் அதற்குரிய பயிற்சியை வழங்கி அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற அந்த 4,000.00 ரூபா கொடுப்பனவை பெறும் வரை எங்களுடைய சொந்த பணத்தில் அந்த 4,000.00 ரூபாய் வழங்குவதாக வாக்குறுதி அளித்துள்ளோம்.

அந்த 32 குடும்பங்கள் வாழ்கின்ற அந்த ஒரு சிறிய பிரதேசத்திலே ஒரு ஆசிரியரை தெரிவு செய்ய முடியுமென்றால், ஏன் இவ்வளவு பெரிய நெய்நாகாட்டில் அங்கிருந்து ஒரு ஆசிரியரே தெரிவு செய்ய முடியாது. அதனை சற்று கவனத்தில் எடுக்குமாறு வேண்டி, நான்காம் மாதம் இடம்பெற்ற கூட்டத்தில் எல்லை வீதி சம்பந்தமாக அந்த வீதியில் வசிக்கின்ற பொது மக்கள் அனைவரின் கையெழுத்திட்டு நானும் அதனை இந்த சபைக்கு சமர்ப்பித்து இருந்தேன். கிட்டத்தட்ட ஒன்றரை மாதங்களுக்குப் பிறகுதான் எரிந்த மின்குமிழ் மாற்றப்பட்டுள்ளது. புதிதாக இரண்டு LED விளக்குகளை அந்தப் பிரதேசத்திற்கு பொருத்து தருமாறு அதில் கேட்டிருந்தோம். நானும் பேசியிருந்தேன் இரண்டு மாதங்கள் ஆகியும் எந்த செயற்பாடும் இடம்பெறவில்லை. அடுத்ததாக அந்த வீதி சிறியதொரு மழை பெய்தாலும்

பாவனைக்கு உகந்ததாக இல்லை. ஆகவே அந்த வீதியைப் பார்வையிட்டு தற்காலிகமாகயாவது அதனை செப்பனிட்டு தருமாறு மீண்டும் கூறி எனது பேச்சை முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெவ்வை அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே எமது சம்மாந்துறை ஹிஜ்ரா சந்தை சம்பந்தமாக பல தடவைகள் இந்த சபையில் பேசப்பட்டு கொண்டிருக்கின்றது. அண்மைகாலமாக ஊடகங்கள் மூலமாக பாதையோர வியாபாரிகள் சம்பந்தமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு கொண்டிருக்கின்றது. அந்த அடிப்படையில் நானும் ஐந்து தினங்களுக்கு முன்பு சென்று பார்வையிட்டபோது, நான்கு மீன் வியாபாரிகளும், மூன்று கடைகளும் திறந்திருக்கின்றது. பாதைகளைப் பொருத்தமட்டில் இருமருங்கிலும் மீன் வியாபாரிகளும், மரக்கறி வியாபாரிகளும் பிரதான பாதை மட்டுமன்றி பௌஸ்மாவத்தை, மீயான்னா சந்தி போன்ற அனைத்து இடங்களிலும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகின்றது. இது பொது மக்களின் விமர்சனத்திற்கு உட்பட்டு அவாகளால் கேள்வி கேட்கப்பட்டு கொண்டிருக்கின்றது. இதற்கு நாங்கள் சபையினூடாக முயற்சி எடுக்கவில்லை என்று குற்றம் கூறவில்ல. எடுக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் அதை மீண்டும் ஒரு தடவை நாங்கள் பிரச்சினையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும் என்பது எனது தயவான கருத்து. அத்துடன் போதைவஸ்து சம்பந்தமாக இன்று நாடளாவிய ரீதியில் ஏற்பட்டிருக்கின்ற இந்த பிரச்சினையின் வெளிப்பாடு நாம் எல்லோரும் அறிவோம். இந்த சபையினால் அதற்கான சில நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்கி முன்னெடுப்பது சிறப்பானதாக இருக்கும். அந்த அடிப்படையில் இளைஞர்கள் சிலர் தாங்களாகவே முன்வந்து இந்த போதைவஸ்துக்கு எதிராக ஒரு குறும் திரைப்படம் தயார் செய்யப்பட்டு, அறிகுறிய பாத்திரங்கள் நபர்களை தேடிக்கொண்டு தயாரித்து கொண்டிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட இந்த உற்சாகமானவர்களோடு இந்த சபையும் ஒத்துழைப்பு வழங்கி, இந்த சமூகப் புரட்சிக்கான போதைவஸ்துக்கு எதிரான இந்த குறும் திரைப்படத்திற்கு உதவ எமது சபையும் முன்வருவது சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

இதே நேரத்தில் எங்களிடம் இருந்த போக்குவரத்துச் சாலைக்கு கௌரவ முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் யூ.எல்.எம். முகைதீன் அவர்களுக்கு நன்றி கூற வேண்டும். நாங்கள் இன்று அந்தப் 18 பஸ்களையும் கல்முனைக்கு அனுப்பிவிட்டு இன்று நெய்நாகாட்டிற்கு பஸ்வேண்டும், மஜீட் புரத்திற்கு பஸ்வேண்டும் என்று கூறிக் கொண்டிருக்கின்றோம். இந்த டிப்போவின் சரித்திரம் ஓரளவு எனக்கு தெரிந்த ஒன்றுதான். ஒரு கஷ்டமான நேரத்தில் இது உருவாக்கப்பட்டது. 07 பேரூந்துகளை லீசங்கில் பெற்று அந்த 07 பேரூந்துகள் மூலமும் வருமானத்தைப் பெற்று லீசிங்கை கட்டி முடித்ததன் பிற்பாடு, இந்த சபை இலாபத்தில் ஓடிக் கொண்டிருந்து.

கல்முனை சாலையில் இருக்கின்ற சேவையாளர்களுக்கு அங்கு இருக்கின்ற சாலை வருமானம் போதாமையால் இந்த சாலை வருமானத்தின் ஊடாக வேதனம் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. அவ்வாறு ஒரு வெற்றிகரமாக செயல்பட்டுக் கொண்டிருந்த இந்த சாலை மிகவும் எளிதான முறையில் இங்கிருந்து பிடுங்கப்பட்டு கொண்டு சென்றிருக்கின்றனர். அதற்கு அவர்கள் காட்டுகின்ற காரணம் அமைச்சரவையின் முடிவு என்று. அமைச்சரவையில் அதில் நிறைவேற்றப்பட்ட ஒன்று என்றால் அதிகமான சாலைகள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு எடுக்கப்படவில்லை. தனிப்பட்ட ரீதியில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றிருக்கின்றது. அதற்காக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன அந்தப் போராட்டம் அரசியல் கலந்த போராட்டமாக இருந்தபடியினால் அந்த பஸ்டிப்போ வேகமாக சென்றுவிட்டது. கௌரவ உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள் கூறியிருந்தார்கள், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் அப்துல் மஜீத் அவர்களின் அரசியல் சேவையும் அவர்களின் சமூக ஒற்றுமைக்கான திறமையான வழிகாட்டலும் எவ்வாறு இருந்தது என்பது நீங்கள் இந்த சபையில் எடுத்துக் கூறியதற்கு அவர் சார்பாக நான் மிகவும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். ஆகவே எமது பஸ் டிப்போ பிரச்சினை நாங்கள் கவலைப்பட வேண்டிய விடயம் அதனை மீண்டும் ஒரு தடவை ஞாபகப்படுத்தி எனது உரையை முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எச்.அன்வர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த சில நாட்களுக்கு முன்னர் பெய்த மழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் அம்பாரை 12B பாதை மற்றும் அம்பாறை பிரதான வீதியின் அஷ்ரப் வட்டை பகுதியில் வடிகான் அடைத்து மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களை தகவல் வழங்கிய உடன் தவிசாளரின் வழிகாட்டலில் துப்பரவு செய்து தந்து தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் சபையின் துப்புரவு பணியாளர்களுக்கும் வட்டாரத்தின் பிரதிநிதி என்ற வகையிலும் அந்தப் பகுதியின் குடியிருப்பாளர் என்ற வகையிலும் மக்கள் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். அம்பாறை 12B வீதியில் வடிகான் மூடப்படாத நிலையில் சிறுவர்களின் பாதுகாப்புக்கும் போக்குவரத்துக்கும் அச்சுறுத்தலாக உள்ளது எனவே அவ்வடிகான் மூடி இடப்பட்டு பாதுகாப்பானதாக மாற்ற வேண்டும்.

எமது ஊரின் முக்கிய இடங்களான விளினையடி சந்தி மற்றும் ஹிஜ்றா றவுண்ட போட் போன்ற இடங்களில் வீதி சமிக்கை பல்புகள் பொருத்தப்பட வேண்டும். இவை இரண்டு இடங்களிலும் வீதி விபத்துக்கள் மற்றும் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் மிகவும் அச்சுறுத்தலான இடங்களாக காணப்படுகின்றது. எனவே இவ்விடங்களில் வீதி போக்குவரத்து பொலிசார் தொடர் கண்காணிப்பில் இருக்க வேண்டும். தற்போது எமது ஊரானது அனைத்து விதமான போதை வஸ்துகளும் பாவிக்கின்ற மையமாக காணப்படுகின்றது. எனவே எமது இளைஞர் சமுதாயத்தை இதிலிருந்து பாதுகாக்கும் வண்ணம் அதனை விற்பனை செய்வோர் அடையாளம் காணப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்த எமது சபை பொலிசாருக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். எமது ஊரின் மீன் சந்தைகள் ஒழுங்கு படுத்தப்பட்டு குறிப்பிட்ட பொருத்தமான இடங்களில் அமைக்கப்பட வேண்டும் என்று கூறி விடைபெறுகிறேன் நன்றி.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இந்த மீன் வியாபாரம் எவ்வாறு பாதைக்கு சென்றது என்பதை நாம் கதைத்துள்ளோம். விமர்சிப்பது யாரையும் இல்லை என்னைத்தான். சபை எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் MOH, பொலிஸ் நிலையம் என்பனவற்றுக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது. மூன்று நாட்களுக்கு முன்பும் நான் பொலிசாருக்கு அறிவித்துள்ளேன். நீங்கள் பார்த்துப் பார்த்து இருக்காமல் அதனை சரி செய்யுங்கள். நாங்கள் povement வியாபாரத்துக்கு யாருக்கும் அனுமதி வழங்கவில்லை. அதில் அரசியல் ரீதியாக பல விமர்சனங்கள் வருகின்றது. அது எனக்கு ஒரு பிரச்சனையும் இல்லை. இதற்கு தீர்வு என்ன தீர்வு உங்களிடமிருந்து தான் வரவேண்டும். மக்கள் பழகிவிட்டார்கள் வீதியோரங்களில் நின்று வாங்கிச் சென்று. வாகன நெரிசல் ஆனதும் தவிசாளருக்கு உடனடியாக அழைத்து இதனை தடுக்க வேண்டும் என்று கூறுவார்களா. இதற்கான தீர்வு கொச்சிக்காய்தூளார் சந்தியில் மீன் சந்தை செய்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் எவரும் அங்கு செல்லவில்லை. இவ்விடத்தை விட்டு யாரும் செல்வதாக இல்லை. நீங்கள் இந்த சபையில் இருந்து ஒரு குழு ஒன்றை உருவாக்கி சொல்லுங்கள் இதற்கான தீர்வு என்ன என்று.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே நீங்களும் இதற்கான பல முயற்சிகள் எடுத்து உள்ளீர்கள். பலரும் கூறியுள்ளார்கள். இப்பொழுது உள்ள நிலைமை என்னவென்றால் பொலிஸ்காரர்களை அவர்கள் விரட்டுகின்றார்கள். இதற்கு பல முயற்சிகள் எடுத்துவிட்டோம். இராணுவத்தினர் மூலம் அவர்களுடைய நடவடிக்கை கட்டுப்படுத்த முடியும் இது தான் இதற்கான தீர்வு. பலமுறை இந்த விடயத்தை கதைத்து விட்டோம். எமது ககாலத்திற்குள் இந்த சந்தை மூடப்பட்டதாக விமர்சனம் வரக் கூடாது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

மார்க்கெட் மூடுவது என்பது கதை அல்ல. சிலரின் விமர்சனம் என்னவென்றால் ஹிஜ்றா சந்தை போதுமா இந்த ஊரிற்கு என்று. உண்மையில் போதாதுதான். ஆனால் மக்கள் எவ்வாறு செய்கின்றார்கள் என்றால் எல்லாவற்றையும் வீதியில் நின்று முடித்துக் கொண்டு செல்கின்றனர். விமர்சிப்பது இல்லை அதற்கான ஒரு தீர்வுதான் தேவை.இராணுவத்தினரை வைத்து இதனைச் செய்ய

முடியாது. அது பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து அதற்கான அனுமதி வர வேண்டும். ஆனால் நான் பொலிஸ் நிலைய OIC யிடம் கூறிவிட்டேன், இனி நான் உங்களிடம் கேட்க மாட்டேன் Disivsion க்குத்தான் எழுதுவேன் என்று.

**கௌரவ உறுப்பினர் எம்.ரீ.பௌசுல்லாஹ் அவர்கள்:**

தவிசாளர் அவர்களே இந்த மீன் சந்தையை பழைய மடுவத்திற்குள் இந்த மீன் மார்க்கெட் சென்று வியாபாரத்தை நடத்தினால் என்ன?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கொச்சிக்காய்தூளர் சந்தியில் இடம் ஒதுக்கி கொடுத்தும் அவர்கள் அங்கு செல்வதில்லை. ஆனால் இந்த பழைய மடுவத்திற்குக் கொண்டு செல்வதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை ஆனால் என்னை பொறுத்த வரையில் அது ஒரு ஒதுக்குப் புறமாக காணப்படுகின்றது. அதற்கான முயற்சி ஒன்றை எடுப்போம்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்வர் அவர்கள்:**

அவர்கள் வைத்துள்ள பெட்டிகளை சபை வாகனங்களை கொண்டு இரவு நேரங்களில் அவ்விடத்தைவிட்டு அகற்றினால் என்ன?

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**

உண்மையிலேயே நாம் இரண்டு பக்கங்களும் இதைப்பற்றி யோசிக்க வேண்டி உள்ளது. உண்மையிலேயே இன்று உள்ள சூழலில் நாம் சாதாரணமாக மக்கள் எவ்வாறு நமது அன்றாட வாழ்வாதாரத்தை போக்குவது என்ற சூழல் காணப்படுகின்ற காலகட்டத்தில், இன்று இந்த வியாபாரங்கள் தனித்தனியாக ஒவ்வொரு குறிப்பிட்ட இடத்தில் நடப்பதால் விலைவாசியை கட்டுப்படுத்த முடியாத ஒரு சந்தர்ப்ப சூழ்நிலை காணப்படுகின்றது. அதேநேரம் சில மீனவர்களை சந்தித்து அவர்களிடம் இது சம்பந்தமாக அணுகியபோது, 44 பதிவு செய்யப்பட்ட மீனவர்கள் சம்மாந்துறையில் காணப்படுகின்றனர். இந்த 44 பேரும் வியாபாரத்திற்காக எமது பொதுச் சந்தைக்கு வந்தவுடன் மக்கள் அங்கு வந்து மீன் கொள்வனவு செய்யும் விதம் குறைவாக காணப்படுகின்றது. சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டு மீன் விற்பவர்களும், வெளியூரிலிருந்து வந்து வீடுகளுக்குச் கொண்டு வந்து கொடுக்கின்றனர். இதனால் மக்கள் சந்தைக்கு வந்து மீன்களை வாங்குவதிலலை என்பது மீனவர்களின் கருத்து. ஆகவே இராணுவம், பாதுகாப்பு படை, பொலிசாரை வைத்து இவர்களை அடித்து விரட்டுவதும் பெரிய விடயமில்லை. எழுப்புவதால் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். அவ்வாறு பாதிக்கப்படும் வாழ்வாதாரத்தை நாம் எவ்வாறு கட்டியெழுப்புவது என்பதற்கான தீர்மானத்தை முன் வைத்துவிட்டு அவர்களை நாம் அவ்விடத்தைவிட்டு எழுப்பவேண்டும்.

காலாகாலமாக மீன் விற்பனை செய்யப்பட்டு வந்தது ஹிஜ்றா பொதுச்சந்தை. அந்த நேரம் குறிப்பிட்ட சில வியாபாரிகள் தான் இருந்தார்கள். ஆனால் இன்று அதிகமானவர்கள் மீன் வியாபாரிகள் காணப்படுகின்றார்கள். இந்த 40, 45 பேரும் ஒரே இடத்திற்கு மீனைக் கொண்டுவருவதனால் மீன் விற்க முடியாத ஒரு சூழ்நிலை காணப்படுவதாக அவர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். அதற்காக நாங்கள் பாதசாரிகளுக்கு இடையூறு வழங்குவதற்கான சந்தர்ப்பத்தை வழங்க முடியாது. மீயன்னா சந்தியில் மீன் விற்கப்படுவதால் அதிகமாக பாதிக்கப் பட்டவன் நான். எனது மகனை பாடசாலைக்குக் கொண்டு செல்வதற்காக செல்லும்போது வாகனம் வந்ததற்கு வழி விட்ட போது ஒரு மீனவர் மீனை ஓங்கிய வெட்டிய போது எனது ஆடையில் மீனின் இரத்தம் பட்டுவிட்டது. இதில் அவனுக்கு தண்டனை வழங்க வேண்டுமானால் அவனுக்கு தண்டனை வழங்கலாம். வாழ்வாதாரத்தை பாதுகாப்பதற்காகவே இந்த ஏற்பாடு செய்கிறான். இது யாரையும் பாதிக்காத வகையில் அதற்கான தீர்வுகளை நாம் முன்வைக்க வேண்டும் என்று கூறி விடை பெறுகிறேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இதற்கான தீர்வுதான் என்ன இன்று நாம் இதனை கட்டுப்படுத்துவதாக இருந்தால் கட்டுப்படுத்த வேண்டும். இல்லை என்றால் விட்டுவிட்டு இருக்கவேண்டும். விமர்சனம் செய்வதில் எனக்கு எந்த ஒரு வருத்தமும் இல்லை. ஆனால் அவ்விடத்தில் ஒரு உயிர் ஆபத்து வரக்கூடிய இடம்.

**தீர்மானம் - 04/52/12**

கல்லரிச்சல் - 02 கிராம சேவகர் பிரிவில் உள்ள பழைய மடுவத்தில், மல்காம்பிட்டி பாதை ஓர மீன் வியாபாரத்தை தடுக்க மீன் சந்தை ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.யூசுப் லெப்பை |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/52/13**

ஹிஜ்றா பொதுச் சந்தை, கல்லரிச்சல் 02 பழைய மடுவம், கொச்சிக்காய்தூளர் சந்தி மார்க்கட் இந்த மூன்று இடங்களில் மாத்திரம் மீன் வியாபாரம் செய்வதற்கும் ஏனைய இடங்களில் பாதை ஓர மீன் வியாபாரம் செய்வதை தடை செய்வதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெவ்வை அவர்கள்:**

உண்மையில் இதற்கான தீர்வு அவசியம் மீன் சந்தைக்கு ஒரு இடமும் மற்றைய பொருட்களுக்கு ஒரு இடத்தையும் தெரிவு செய்து மக்களுக்கு அதனை ஆராய்ந்து அந்த இடத்தை கண்டுபிடித்து வழங்குவோம். மக்கள் பொருள் இருக்கின்ற இடத்தில் பொருட்களை தேடிச் செல்வார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இந்த மது போதை விடயமாக, தயவு செய்து இது ஒரு முக்கியமான விடயம். கருத்துகள் முன்வைக்கின்ற உறுப்பினர்கள் ஒரு குழுவாக இயங்கி சென்னெல் ஸாஹிறா, அல்-அர்சத் வித்தியாலயம், அல்- அஸ்ஹர் வித்தியாலயம், கஸ்ஸாலி வித்தியாலயம் போன்ற பகுதிகளில் போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு செயலமர்வுகளை பிரதேச செயலகம், பொலிஸ் நிலையம், உரிய மஹல்லா பொறுப்பதிகாரிகளின் பங்குபற்றலுடன் மேற்கொள்வோம். மஹல்லா நிர்வாகத்துக்கு தெளிவாக தெரியும் சட்டவிரோதமான செயற்பாடுகள் யார் யார் செய்கின்றார்கள் என்று தெளிவாக தெரியும். ஆனால் அவர்கள் ஒருவரும் முன்வந்து செய்வதில்லை. குடும்ப அங்கத்தவர்களை பெற்றோர்களுக்கு பாதுகாக்க முடியவில்லை என்றால் சமூகம் எவ்வாறு பாதுகாப்பது. பிரச்சினை ஒரு எல்லைக்கு அப்பால் போய்விட்டது. கௌரவ உறுப்பினர்கள் அதனை எவ்வாறு செய்வது என்பதை ஆராய்ந்து சொல்லுங்கள்.

நெய்நாகாடு பாலர் பாடசாலை நான் இறுதியாக சொல்ல நினைத்ததை கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் கூறிவிட்டார்கள். இங்கிருந்து அங்கு சென்று படிப்பிக்க முடியாது. முதல் அங்கு இருந்த பிள்ளைகளுக்கு சபை உதவி செய்தது. அந்த நேரத்தில் அந்தப் பிள்ளைகள் படிப்பிப்பதற்கு அவர்களுக்கு சம்பளம் கொடுத்து வைத்துக் கொண்டிருந்தோம். பின்னர் மாகாண சபை அவர்களைப் பாரமெடுத்தவுடன் பிள்ளைகள் வேறு தொழிலுக்கு சென்று விட்டார்கள். அதற்கு பிறகு இங்கு இருந்து செல்வாக்கு மூலம் ஆக்கள் போடப்பட்டு சென்ற போது நாம் உதவி செய்தோம். ஆனால் எம்மிடம் உள்ளது இரண்டு வாகனங்கள் தான். நெய்நாகாட்டிற்கு சென்று வருவது என்பது சின்ன ஒரு விடயமல்ல. அதை செய்ய முடியாத காரணத்தினால் அது நிறுத்தப்பட்டது. நெய்நாகட்டு சனசமூக நிலையத்தை உயிர்பித்து அதன் மூலமாக அந்தப் பகுதியில் இருக்கின்ற இரண்டு பேருக்குரிய கொடுப்பனவை சனசமூக நிலையத்திற்கு வழங்குவோம். நாம் தலையிடாமல். ஒரு முடிவு எடுப்போம் அதற்கான ஆசிரியர்களை தெரிவு செய்யும் அந்த தெரிவுக்குழுவில் அங்குள்ள பாடசாலையின் அதிபர் ஆசிரியர்களையும் அழைத்து அவர்கள் மூலமாக நேர்முகப்பரீட்சை ஒன்றை நடாத்தி நாம் இரு ஆசிரியர்களை தெரிவு செய்வோம்.

### கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:

இங்குள்ள பாடசாலை அதிபரும், ஆசிரியர்களும் மிகவும் முன்மாதிரியான சில விடயங்களை மேற்கொண்டு வருகின்றார்கள். அவர்கள் பாடசாலை கல்வியுடன் மாத்திரமன்றி கிராமத்தின் சில தேவைகளையும் அறிந்து செயற்பட்டு வருகின்றார்கள்.

### தீர்மானம் - 04/52/14

நெய்நாகாடு பாலர் பாடசாலைக்கு அப்பிரதேசத்தில் உள்ள இருவரை ஆசிரியாராக தெரிவு செய்வதுடன், நெய்நாகாடு சனசமூக நிலையத்தை மீண்டும் உயிர்ப்பித்து, சனசமூக நிலையத்திற்கு மாதாந்த கொடுப்பனவு ஒன்றை வழங்கி அதன் ஊடாக ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை மேற் கொள்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

### கௌரவ உப தவிசாளர் உறுப்பினர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:

இறக்காமத்து பஸ் போடுவது சம்பந்தமான விடயம் ஒன்று கதைத்தார்கள். நாம் வலயக்கல்வி அலுவலகத்தில் ஒரு கடிதம் ஒன்றை அனுப்பவேண்டும், இறக்காமத்தில் உள்ள எவரும் ஒராபி பாஷா, இலுக்குச் சேனை போன்ற பிரதேசங்களுக்கு செல்வதில்லை. ஆனால் சம்மாந்துறையில் இருக்கின்ற ஆசிரியர்களை தான் அங்கு அவர்களை ஆசிரியராக போடுகிறார்கள். நாம் இவ்வளவு காலமும் இதைப் பற்றி சிந்திக்கவில்லை. இப்படி இருக்கும் சூழ்நிலைகளை கவனத்தில் கொண்டு நாம் ஒரு முடிவு எடுப்போம் தற்பொழுது உள்ள போக்குவரத்து பிரச்சனை காரணமாக வலயக் கல்விப் பணிப்பாளருக்கு நாம் ஒரு வேண்டுகோள் விடுப்போம். சம்மாந்துறையைச் சேர்ந்த ஆசிரியர்களை இறக்காமம், ஒராபி பாஷா, இலுக்குச் சேனை போன்ற இடங்களுக்கு என்று ஒரு வேண்டுகோள் விடுப்போம்.

### கௌரவ தவிசாளர் அவர்கள்:

இதனை நாம் ஒரு தீர்மானமாக எடுக்க முடியாது. சபையில் இவ்வாறான கருத்துக்கள் பரிமாற்றப்பட்டதாக வலயக்கல்விப் பணிப்பாளருக்கு கடிதம் ஒன்றை எழுதுவோம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**

ஆசிரியர் முன்வைக்கும் கோரிக்கை அங்கு செல்வதற்கு என்று சொல்லி அவர்கள் கோரிக்கையை முன்வைக்கவில்லை ஆசிரியர்கள் கோரிக்கை போக்குவரத்துப் பிரச்சினை தான் என்பதை தவிர அவர்கள் அங்கு சென்று இப்போது உள்ள சூழ்நிலையில் எரிபொருள் செலவு அதிகரிப்பதனால் போக்குவரத்து பிரச்சினைகள் காணப்படுகின்றது

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இந்தப் பிரச்சினை இன்று ஏற்பட்டது இல்லை. இது கிட்டத்தட்ட 10, 15 வருடங்களாக இந்த பிரச்சினை ஏற்பட்டு கொண்டிருக்கின்றது. இறக்காமத்தில் உள்ள பாடசாலைகளுக்கு யாரை ஆசிரியராக போடுவது என்று இறக்காமத்தவர்கள்தான் தீர்மானிப்பது. அவர்கள் அந்த ஊருக்குள் தான் இருப்பார்கள். வெளியிலிருந்து வருகின்றவர்களைத் தான் தூரப் பாடசாலைகளுக்கு அனுப்புவார்கள்.

அடுத்த விடயம் கௌரவ உறுப்பினர் யூசுப்லெப்பை கூறிய கருத்து. டிப்போவை பற்றிக் கூறியிருந்தார்கள். நாம் கௌரவ உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் சரியான முறையில் கருத்துக்களை உள்வாங்கி யாரும் சொல்வதை நாங்கள் சொல்ல முடியாது. ஏனென்றால் இந்த பஸ் டிப்போ அவசர காலத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளை கருத்தில் கொண்டும் இங்கு வந்தது. இந்த டிப்போ சம்மாந்துறை மக்களின் தேவைகளை பூர்த்தி செய்திருந்தால் சம்மாந்துறை மக்கள் அனைவருமே வீதியில் இறங்கி இருப்பார்கள். நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் இருந்து எடுத்த முயற்சிதான் இந்த நெய்நாகாடு, மஜீட்புர பஸ் போக்குவரத்து. இந்த சப் டிபோக்கள் பிரதான டிப்போகுக் கீழ் செல்ல வேண்டும் என்ற தீர்மானம் வந்ததும் சம்மாந்துறை சப் டிப்போ அது பிரதான டிப்போவுடன் சேர்ந்தது.

அரசியல் ரீதியாக நாம் ஆர்ப்பாட்டம் செய்யப் போனால் எதுவும் நடக்காது. இது கேபினட் முடிவு. இந்த ஊர் மக்களுக்கு அந்த தேவையிருக்கவில்லை அவர்கள் அனுபவிக்கவில்லை. எமக்கு பிரயோசனம் இல்லாமல் இந்த பஸ்டிப்போ இங்கு இருப்பதில் விசயம் இல்லை. எவ்வளவு வெற்றிகரமாகச் செய்தார்கள் என்றாலும் அவர்களுடைய சகலவிதமான கணக்குகளும் என்னிடம் உள்ளது. கல்முனை, சம்மாந்துறை, இறக்காமம் பஸ் சேர்வீஸ் எத்தனை ஆசிரியர்கள் உள்ளார்கள் என்ற விபரங்களை போட்டு நாம் அதனை செயல்படுத்துமாறு கூறி அதற்கான முயற்சியை எடுப்போம்.

இது ஒரு முக்கியமான விடயம், இந்த அஹதியா கல்விக்கு தனியார் வகுப்புகள் தடையாக உள்ளது என்று சென்ற கிழமை பள்ளிவாசலில் ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. நான் கூறியது என்னவென்றால் மார்க்க கல்வியை பிரம்பு எடுத்துக் கொண்டு படிப்பிக்க முடியாது. மார்க்கக் கல்வியை படிப்பதாக இருந்தால் அந்த வீட்டில் மர்க்க சூழல் இருக்க வேண்டும் அல்லது பாடசாலைக்கும் அந்த அஹதியாக் கல்விக்கும் தொடர்பு இருக்க வேண்டும். அவர்கள் ஒரு கடிதம் கொண்டு வந்தார்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் வகுப்புகள் நடத்த கூடாது என்று நாவிதன்வெளி பிரதேசசபை மட்டுமே தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றார்கள். நான் அதற்குப் கூறினேன் நீங்கள் எங்களிடம் இது சம்பந்தமாக எதுவும் கேட்டுள்ளீர்களா? ஆவ்வாறு கேட்டிருந்தால் நாங்களும் தீர்மானங்களை எடுத்திருப்போம்.

## தீர்மானம் - 04/52/15

மார்க்கக் கல்வியை (அஹதியா கல்வி, அற நெறிப்பாடசாலை) ஊக்குவிக்கும் நோக்கில் சம்மாந்துறை பிரதேச சபை எல்லக்குட்பட்ட பகுதியில் ஞாயிற்றுக் கிழமைகளில் பிரத்தியோக வகுப்புக்களை காலை 06.00 மணி தொடக்கம் பி.ப 01.00 மணி வரை நடாத்துவதை தடை செய்வதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்

ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம்

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/52/16**

முகைதீன் பொது நூலகத்திற்கான நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்காக அதன் அருகில் அம்பாறை வீதியில் உள்ள MPCS இற்குச் சொந்தமான நிலத்தை பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்வதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/52/17**

சென்னெல் ஸாஹிறா, அல்-அர்சத் வித்தியாலயம், அல்- அஸ்ஹர் வித்தியாலயம், கஸ்ஸாலி வித்தியாலயம் போன்ற பகுதிகளில் போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு செயலமர்வுகளை பிரதேச செயலகம், பொலிஸ் நிலையம், உரிய மஹல்லா பொறுப்பதிகாரிகளின் பங்குபற்றலுடன் மேற்கொள்வதற்கும் அதற்குரிய செலவினங்களை சபை நிதி மூலம் மேற்கொள்வதற்குமான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

இன்றைய அமர்வை முடிப்பதற்கு முதல் நான் ஒரு அறிவித்தல் ஒன்றை குறிப்பிட வேண்டும். கட்சி என்னை இடை நிறுத்தியதற்கான எதிராக நான் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு இம்மாதம் 22ஆம் திகதி வழங்கப்படுகின்றது. அந்த தீர்ப்பு எனக்கு சாதகமாக வரும் பட்சத்தில் அடுத்த சபையிலும் நாம் சந்திப்போம். தீர்ப்பு எனக்கு பாதகமாக இருந்தால் அந்த நாளிலிருந்து நான் இந்த சபையின் அங்கத்தவராக இருக்க மாட்டேன். நான் வர்த்தமானி வரும் வரையும் இருக்க மாட்டேன். இந்த செய்தியை தெரிவித்து இந்த அமர்வை முடிவுக்குக் கொண்டு வருகின்றேன்.

தவிசாளர்,
சம்மாந்துறை பிரதேச சபை.
சம்மாந்துறை.